Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖ பல் கட்டுவதற்கும்,
❖ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖ இலவச கண் பரிசோதனை செய்து,
நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 07 (02.12.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:63

# புலித்தேவன் தலைமையில் புலிகளின்குழு
# ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுடன் பேச்சு!

(கேப்ரவுண்)

**விடுதலைப் புலிகளின் அரசியற்குழு உறுப்பினர்கள் தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான ஏழுபேர் கொண்ட குழுவே இந்தச் சந்திப்பில் பங்குபற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**


இந்தச் சந்திப்புக் குறித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான ஏழுபேர்கொண்ட அரசியற் குழுவுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேச்சு நடத்தியது. நேற்று நடந்த இந்தச் சந்திப்பையடுத்து, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவுடன் இன்று சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்புக்களின் நோக்கம், தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட நெருக்கடியின்போது பல கட்சித் தீர்வுமுறை காணப்பட்டதன் அனுகூலங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் - இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவுவதே ஆகும்.

புலிகளின் அரசியல் குழுவினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)



தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான அரசியற்குழு உறுப்பினர்களைப் படத்தில் காணலாம்.

## திருமலை பதற்றநிலை தொடர்பாக விடுதலைப் புலிகள்-படையினர் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை தொடர்பாக நேற்றுக்காலை 11 மணியளவில் திருகோணமலை தலைமைப் பொலிஸ் அலுவலகத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தலைமையில் சமாதானக் குழுக்கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பள்ளிவாசல்களின் தலைவர்கள், இந்துமத குருமார், கிராமசேவையாளர்கள் மற்றும் சமாதானக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே, கிண்ணியா, ஆலங்கேணி பிரச்சினைகளுக்கு காரணம் விடுதலைப் புலிகளே எனத் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த கூட்டத்துக்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்பட்டிருந்தும் அவர்கள் செல்லவில்லை. இது தொடர்பாக அவர்களிடம் கேட்டபோது பொலிஸ் நிலையமொன்றில் கண்காணிப்புக்குழுவின் பிரசன்னம் இல்லாமல் நடக்கும் கூட்டத்தில் நாம் கலந்துகொள்ள மாட்டோம் எனத் தெரிவித்தனர்.

இதன்பின்னர், திருமலையிலுள்ள கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் 1.30 மணிக்கு மாவட்ட பிரதித் தலைவர் தலைமையில் விடுதலைப் புலிகள், படைத்தரப்பினர் மற்றும் கிராமசேவையாளர்கள், முஸ்லிம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர் ஒருவர் கிண்ணியாவில் சுடப்பட்டார்!

(திருமலை)

திருகோணமலை - கிண்ணியா ...ரன் கல்லிலிருந்து கச்சைக் கொடித்...வு நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த முஸ்லிம் இளைஞரான கே.எல்.ஜலீல் (வயது 23) நேற்று நண்பகல் 12 மணியளவில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டதில் கழுத்தில் படுகாயமடைந்தார்

மிகவும் ஆபத்தான நிலையில் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், அங்கிருந்து திருமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வைத்திருந்த முஸ்லிம்கள் திருகோணமலை பொலிஸால் கைது!

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் ஓட்டோ ஒன்றிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டதுடன், அதனை எடுததுச் சென்ற மூன்று முஸ்லிம்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

திருகோணமலை நகர்ப்பகுதியில் வீதியால் சென்றுகொர்ண்டிருந்த ஓட்டோ ஒன்றினைப் பொலிஸார் சோதனையிட்டபோது, அதில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது. இந்தக் கைக்குண்டினை எடுத்துச்சென்ற ஓட்டோ சாரதி உட்பட மூவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இம்மூவரும் கிண்ணியாவைச் சேர்ந்தவர்களென்றும், அவர்களில் ஒருவர் வர்த்தகர் என்றும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் மூலம் தெரியவந்தது.

இதேவேளை, கிண்ணியாப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் கைக்குண்டுத் தாக்குதல்களையடுத்து அங்கு பெரும்பதற்றம் நிலவி வருகிறது என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி சந்திரிகாவின் கரங்களை முஸ்லிம்கள் பலப்படுத்தவேண்டுமாம்!

### பேரியல் அஷ்ரப் கூறுகிறார்

(கொழும்பு)

முஸ்லிம்கள் தமது சுயபாதுகாப்பை உறுதிசெய்துகொள்வதற்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கரங்களைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிண்ணியாவில் முஸ்லிம்கள் மீதான வன்முறைகளைத் தடுக்கத் துரிதமாகச் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்த அவர், இந்தச் சம்பவம் குறித்துக் கண்டனம் தெரிவித்தார்.

## சங்கரியை நியமித்த மத்திய குழுவே அவரை பதவியிலிருந்தும் நீக்கியது!

### சங்கரியின் கருத்துக்கு சம்பந்தன் பதிலடி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைமைத்துவத்திற்கு ஆனந்தசங்கரியை நியமித்த மத்தியசபைதான் அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு தீர்மானம் எடுத்ததாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டத்தின் பின்னர் ஆனந்தசங்கரி, தம்மை நியமித்த பொதுச்சபைக்கே பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் இருப்பதாக தெரிவித்து வருவதையடுத்தே, சம்பந்தன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிவசிதம்பரம் இறந்த பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு இராஜதந்திர ரீதியில் இனப்பிரச்சினையை அணுகவேண்டும்

### ரவூப் ஹக்கீம் கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா இராஜதந்திர ரீதியில் உதவ முன்வரவேண்டும். இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சின்காவிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பின்பின் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பொழுது இலங்கையில் ஏற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் விடுதலை முன்னணிக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு!

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியை பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக அழைப்பினை ஜனாதிபதி செயலகம் மக்கள் விடுதலை முன்னணிக்கு அனுப்பியுள்ளது.

சுதந்திரக் கட்சிக்கும் மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமர் ஆலோசகர்கள் நேற்று அலரிமாளிகையில் சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல, ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பிரதம மந்திரியின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் நேற்று அலரிமாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி, மற்றும் பிரதம மந்திரியின் செயலாளர்கள் கைச்சாத்திட்டிருக்கும் கூட்டுக் குழு அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு கட்சிகளுக்கிடையில் குறிப்பிட்ட நிலைகளில் காணப்படும் இணக்கப்பாடுகள் குறித்து குழு தொடர்ந்தும் பரிசீலனை மேற்கொள்ளும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அபிப்பிராய பேதங்கள் நிலவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1753)

### தேசிய சேமிப்பு வங்கியின்

# இறுக்கமான நடைமுறைகளால் கடன்களைப் பெறமுடியாத நிலை!

## அரச ஊழியர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியில் வழங்கப்படும் அரச ஊழியர்களுக்கான கடன் திட்டத்தில் காணப்படும் இறுக்கமான நடைமுறைகளால் கடன்பெறுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பத்திரிகைகளில் பிரசாரப்படுத்தப்படும் அளவிற்கு துரிதமான சேவையாக இந்தக் கடன் திட்டம் அமையவில்லை.

இதேவேளை, ஏனைய கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் பொது அமைப்புக்கள் கடைப்பிடிக்காத வகையில், பல இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்து வரும் தேசிய சேமிப்பு வங்கியினர் கடன் வழங்குவதற்கும் நீண்டகால தாமதத்தையும் ஏற்படுத்துவதாக அரசாங்க ஊழியர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இந்தக்கடன் திட்டத்தின கீழ், கடந்த ஆறுமாதங்களில் ஒருவர் மாத்திரமே கடன்பெற தகுதிபெற்றிருக்கிறார் என்பதனூடாக இந்த கடன்திட்டத்தின் கடுமையான போக்கினை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

அரச ஊழியர்கள்களில் அதிக சம்பளம் பெறுவோருக்கு மட்டுமே இக்கடன் வழங்கப்படுவதால், வருமானம் குறைந்த உத்தியோகத்தர்களுக்கு இத்திட்டத்தால் பலன் கிடைப்பதில்லை எனவும், இது தேசிய சேமிப்பு வங்கியின் தன்னலம் மிக்க திட்டமெனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கிறனர்.

இதுகுறித்து யாழ்.பிராந்திய தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் எம்.சிவானந்தனிடம் கேட்டபோது - தமக்கு கடன் வழங்குவதற்கான அதிகாரங்கள் சரியான முறையில் வழங்கப்படவில்லை எனவும், ஓரளவுக்கு இவ் விடயத்தில் அதிகாரம் இருப்பின் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் இக்கடனை வழங்கமுடியும் எனவும் தெரிவித்தார். (ப)

# கிணற்றில் தவறி வீழ்ந்து இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறிவீழ்ந்து இளம் குடும்பப்பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று அச்சுவேலி தோப்புப் பகுதியில் இடம்பெற்றது. அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ரவிச்சந்திரன் சுமதி (வயது-32) என்பவரே பலியானவராவார்.

தண்ணீர் அள்ளுவதற்காகக் கிணற்றடிக்கு சென்றபோது, கால் தடக்கி தவறுதலாக இவர் கிணற்றில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இவர் மனநிலை பாதிக்கப்பட்டவராகவும் இருந்தார் என கணவர் தெரிவித்தார்.

உயிரிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைககப்பட்ட இவரது சடலம் மரண விசாரணையின் பின் கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

# காவலூர் - காரைநகர் பாதை சேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம்!

ஊர்காவற்துறை - காரைநகர் வீதியூடான பாதைச்சேவையை நேற்றுமுதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுள்தாக அந்தச்சபை தெரிவித்துள்ளது.

ஊர்காவற்துறையிலிருந்து காலை 7.30, முற்பகல் 9.30, மதியம் 11.30, பிற்பகல் 1.30, பிற்பகல் 3.30, மாலை 5.00 ஆகிய நேரங்களிலும்- காரைநகரிலிருந்து காலை 8.00, முற்பகல் 10.30, மதியம் 12.00, பிற்பகல் 2.30, மாலை 4.30, மாலை 5.30 ஆகிய நேரங்களிலும் சேவை நடைபெறுமென அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் சோ.சிறிநிவாசன் தெரிவித்தார்.

இந்த வீதியூடாகப் பிரயாணம் செய்யும் பயணி ஒருவருக்கு 2 ரூபாயும், மிதிவண்டி ஒன்றிற்கு 3 ரூபாயும், மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு 5 ரூபாயும், முச்சக்கரவண்டிக்கு 14 ரூபாயும், அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சேவை மறு அறிவித்தல் வரை அதிகாரசபை பொறுப்பேற்று, சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இந்தப்பாதை ஊடான முறைப்பாடுகளும், ஆலோசனைகளையும் நிறைவேற்றுப் பொறியியலாளர், அல்லது பிரதம பொறியியலாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தேயிலை சபையின் கிளை விரைவில் யாழ்.நகரில் செயற்படும்!

(கொழும்பு)

இலங்கைத் தேயிலை சபையின் கிளைநிறுவனம் ஒன்று யாழ்.நகரப்பகுதியில் செயற்படவுள்ளது. இத்தகவலை இலங்கைத் தேயிலை ஆராட்சி நிறுவனத்தின் இயக்குநர் எம்.ரி. சயிட் மொகமட் நமது ஈழநாட்டுக்கு தெரிவித்தார்.

இலங்கையின் பலபகுதிகளிலும் செயற்பட்டுவரும் இத்தேயிலை ஆராய்ச்சி சபையின் கிளை நிறுவனம் ஒன்றை யாழ்.நகரப்பகுதியில் திறப்பதற்கு இடம்பார்க்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் இதுதிறந்து வைக்கப்படவுள்ளது. தேயிலையின் முக்கியத்துவம், அதன் பயன்கள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் இலங்கைத் தேயிலைச் சபையின் ஒழுங்கமைப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மேலதிக கருத்தரங்குகள் -தேயிலைச் சபையின் கிளை நிறுவனம் இயங்கத் தொடங்கியதும் நிகழ் தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவருடன் அச்சபையின் சுகாதார ஆராய்ச்சி அதிகாரி கலாநிதி அமரக்கோனும் வருகைதந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ப)

### யாழ்.செயலகத்தில் தேங்கியுள்ள

# தேசிய அடையாள அட்டைகளை நேரில் வந்து பெறக் கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தில் 700 அடையாள அட்டைகள் தேங்கியுள்ளதால் அவற்றை உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு ஆட்பதிவு உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இதுவரை காலமும் அடையாள அட்டைகள் தபால்மூலம் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுவந்தன. எனினும் இம்முறை யாழ்.செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் பணியாளர் பற்றாக்குறை மற்றும் பணப்பற்றாக்குறை காரணமாக அவ்வாறு செய்யப்படவில்லை.

எனவே, அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அவற்றை நேரில்வந்து பெற்றுக்கொள்ளுமாறும், அவ்வாறு பெற்றுக்கொள்ளாதவர்களின் அடையாள அட்டைகள் திரும்பிச் செல்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் ஆட்பதிவு திணைக்கள உத்தியொகத்தர் மேலும் தெரிவித்தார். (ப)



வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான இயற்கை சூழலை பாதுகாத்தல் எனும் விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கருத்துரை வழங்கியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், கருத்தரங்கில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

(கிளிநொச்சி)

வேட்டைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் வயற்பகுதியில் காட்டுப் பன்றிக்கு வைத்த கட்டுத்துவக்கில் சிககி படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பவனீதரன் (வயது 23) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; மூன்று பேரடங்கிய குழுவினர் கடந்த [illegible]க்கிழமை இரவு ஊற்றுப்புலம் கா[illegible]ப் பகுதிக்கு வேட்டைக்குச் சென்ற வேளை - பயறு விதைக்கப்பட்ட வயலுக்குள் கட்டுத்துவக்கு வைக்கப்பட்டிருந்ததெனவும், அது வெடித்தமையாலேயே காயமடைய நேரிட்டதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் சென்ற மற்றய இருவரும் இவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். அங்கிருந்து இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். (12[illegible])

# பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(சுதுமலை)

மானிப்பாய் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினரால் பொலிஸ் நிலையப் பகுதிக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத் தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது. இக்கருத்தரங்குகளை போக்குவரத்து பொறுப்பதிகாரி பி.எஸ்.அரிச்சந்திரா, சுந்தரலிங்கம் ஆகியோர் நிகழ்த்தி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதற்கு துவிச்சக்கர வண்டியில் பக்கம் பக்கமாகப் பயணிப்போர் மற்றும் வாகன சாரதிகள் வீதி விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்காமை ஆகியவையே காரணமெனவும், இவ்வாறு செயற்படுவோர் மீது சட்டநடவடிக்கை [illegible] பதுடன் குறிப்பிட்ட தொகை [illegible]டப்பணமாக அறவிடப்படும் எனவும் மானிப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (91)

## நுண்கலைத்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

நுண்கலைத்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு நுண்கலைத்துறை வளாகத்தினுள் நடைபெறவுள்ளது. எனவே, சகல நுண்கலைத்துறை மாணவர்களையும் தவறாது இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு, நுண்கலைப்பீட மாணவ பிரதிநிதி கேட்டுள்ளார்.

நவீன Digital தொழில்நுட்பத்துடன்
Mobital G.S.M. உங்கள் வாசலில்
அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாணவர்கள் மற்றும் வங்கியாளருக்கான விசேட பக்கேஜ்களுடன் கூடிய இணைப்புக்கள் செய்து தரப்படும்
யாழ்.மக்களுக்கோர் நற்செய்தி
பிரதேச ரீதியாக முகவர்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.
புதிய பார்வை, புதிய வடிவத்தில்
MOBITAL G.S.M
❑ Sim Card
❑ மேசைத் தொலைபேசி.
❑ கையடக்கத் தொலைபேசி.
இன்னும் பல Mobital இன் சேவைகளுக்கு Mobital நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட யாழ். முகவர். (சி-1849)
100% Sri Lankan TeleCom
YARL MOBILES
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(தபாற்பெட்டி சந்தி முன்வீதி) 021 - 222 3523/6887
Mobitel
Authorizeg Dealer in Jaffna, District

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
2 FAST 2 FURIOUS

ராஜா யாழ்ப்பாணம்.
7 ஆம் திகதி வரை
சிலம்பரசன், ஷர்மி நடித்த
காதல் அழிவதில்லை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1751)

பணம் தொலைந்துவிட்டது
நவிண்டில் சந்திக்கும் நெல்லியடி கொமர்ஷல் வங்கிக்கும் இடையில் குறிப்பிட்ட தொகைப்பணம் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
S.காண்டீபன்
திரு வீடியோ விஷன், மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டி.
T.P:0777 841243
(சி-1850)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்றி பணிகளை முன்னெடுப்பதில் சிரமங்கள்

## உபதலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நாட்டில் இல்லாத நிலையில், கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பதில் பல சிரமங்கள் தோன்றியிருப்பதாக கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினரும் தற்போது தமது முயற்சிகளிலிருந்து ஒதுங்கியிருக்கும் நிலையில், தமது பணிகள் இன்னும் சிக்கலடைந்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் நோர்வேயில் இருக்க, பிரதித் தலைவரும், களத்தில் நிற்கும் கண்காணிப்பாளர்களும் தமது பணிகளைச் சரிவர மேற்கொள்வது சாத்தியமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், உடனடியாகக் கண்காணிப்புக்குழுவுக்கு ஒரு தலைவரை நியமிக்குமாறு, தாம் நோர்வே அனுசரணையாளர்களைக் கோரியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தக் கோரிக்கையைத் தாம் ஜனாதிபதயிடம் விடுக்கமுடியாது என்பதால், நோர்வே அனுசரணையாளர்களிடம் தமது கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் தெரிவித்த அவர், நோர்வே தற்போதும் அனுசரணையாளர்களாக இருப்பதாக வலியுறுத்தியதுடன், தாம் அவர்களுக்கே தமது அறிக்கைகளை அனுப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் சிறில் ஹேரத்தை அண்மையில் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் தெரிவித்துள்ள கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர், களத்தில் ஏதும் சிக்கல் தோன்றுமிடத்து - அரச தரப்பில் யாருடன் தாம் தொடர்பு கொள்வது என்பது தொடர்பில் இன்னமும் தெளிவான ஒரு நிலைப்பாடு எட்டப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

களத்தில் ஏதாவது சிக்கல் தோன்றுமிடத்து, அதனை உடனடியாகக் கண்காணிப்புக்குழு கையாள முடிந்தாலும், மேற்கொண்டு சர்ச்சையைத் தீர்த்துவைப்பதற்கு அரச தரப்பிலும், விடுதலைப் புலிகள் தரப்பிலும் உயர்பீடங்களைத் தொடர்பு கொள்வது மிகவும் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

# கொட்டாஞ்சேனை, மொறட்டுவ பகுதிகளில் டிசம்பர் இறுதிக்குள் பூமியதிர்ச்சி நிகழும்?

(கொழும்பு)

இலங்கையின் வான்பரப்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் இரண்டு வால்நட்சத்திரங்கள் தென்படும் என்று, பூகற்பவியல் விஞ்ஞானி கலாநிதி லலித் விஜேவர்தன தெரிவித்தார்.

சிலுவை போன்றும், முக்கோணம் போன்றும் வடிவங்கள் கொண்ட இந்த வால்நட்சத்திரங்களை- முதல் மூன்று வாரங்களுக்குப் பார்க்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரவு 10 மணிமுதல் காலை 5.30 மணிவரை இந்த வால்நட்சத்திரங்கள்- மேல்மாகாணத்தில் தெளிவாகத் தெரியும். இதேவேளை, அண்மையில் மோதர, கொட்டாஞ்சேனை பகுதிகளில் ஏற்பட்ட மினிசூறாவளி, இலங்கையில் ஏற்படவுள்ள பூமி அதிர்ச்சிக்கான அறிகுறி என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் 30 ஆம் திகதிக்குமுன் கொட்டாஞ்சேனை, மொறட்டுவ கடற்கரையோரப் பிரதேசங்களில் பூமியதிர்ச்சி ஏற்படும். இல்லையேல், ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்பு பூமியதிர்ச்சி நிகழும் என்றும்,

இந்த பூமியதிர்ச்சி நிகழ்வதற்கு முன்பு, சிறு நிலநடுக்கங்கள் ஏற்படும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

# வடக்கில் முஸ்லிம்கள் மீள்குடியமர சர்வதேச சமூகம் உதவவேண்டும்!

## வன்னிமாவட்ட எம்.பி. ரிசாத் பதியுதீன்

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துவதற்கு - இந்தியாவும், சர்வதேசசமூகமும் உதவ வேண்டும் என, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் அரசியல் விவகாரக் குழுவொன்று இந்தியா சென்றுள்ளது. அந்தக் குழுவில் ஒருவராகச் சென்றுள்ள பதியுதீன்- செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு ஒரு தசாப்தம் கடந்துவிட்டநிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளும்சரி, அரசாங்கமும்சரி - அவர்களை மீளக் குடியேற்றி, உரியவசதிகள் செய்து கொடுப்பது பற்றிச் சிந்திக்கவில்லை.

இந்தநிலையில், இவ்விடயத்தில் சர்வதேச சமூகமும், குறிப்பாக எமது அயல்நாடாகிய இந்தியாவும் அழுத்தத்தைப் பிரயோகித்து, முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு ஒத்துழைக்கவேண்டும்.

முஸ்லிம்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படவேண்டிய தேவை இருப்பதனால், எமக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கவேண்டும். இலங்கையில் தோன்றும் எந்தவொரு அரசியல் தீர்விலும் இந்தியாவின் பங்களிப்பு இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஆகையால், இந்தியா எமது மக்கள் விடயத்தில் சரியான, நியாயமான தீர்வினை எடுக்க அரசிற்கு அறிவுறுத்தவேண்டும் என்றார்.

இதேவேளை - தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க.வின் தலைவர் மு.கருணாநிதி ஆகியோரையும் இக்குழுவினர் விரைவில் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# பேச்சுக்கான தடைகளை பிரபாகரன் அகற்றிவிட்டார்

## அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான தடைகளை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அகற்றிவிட்டார் என்று, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்புத் தயாரில்லை எனவும், சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தலைவர் பிரபாகரன் தெரிவித்திருப்பதை வரவேற்றுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க, சமாதான முயற்சிகளை எவ்வித தடங்கலுமின்றி முன்கொண்டு செல்லலாம் என்பது தெளிவாகிவிட்டதாகவும் கூறினார்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபுக்கான நியாயங்களைத் தலைவர் பிரபாகரன் முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அதில் சில கோரிக்கைகளைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அவர்களின் இடைக்கால யோசனையை அடிப்படையாக வைத்து, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கமுடியும் எனவும் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# இராணுவம் - விசேட அதிரடிப்படை இணைந்து பயிற்சி நடவடிக்கை!

(கொழும்பு)

இராணுவமும் விசேட அதிரடிப் படையும் இணைந்து பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவும், விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லெகேயும் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்தப் பயிற்சியை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சி அளிக்கும் அதிகாரிகள், குடா ஓயா மற்றும் மாதுறு ஓயா இராணுவ பயிற்சித் தளங்களுக்கு சென்றுள்ளனர். இவர்கள் அங்குள்ள பயிற்சி வசதிகள் குறித்து ஆராயவுள்ளனர்.

இராணுவத்தைச் சேர்ந்த கொமாண்டோப் பிரிவு மற்றும் விசேட படைப்பிரிவுகளைச் சேர்ந்த படையினருடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்வது குறித்து விசேட அதிரடிப்படை அதிகாரிகள் பேச்சுக்களை நடத்திவருகின்றனர்.






அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மாவீரர்தின நிகழ்வு இடம் பெற்ற மண்டபத்தின் நுழைவாயிலை முதற்படத்திலும், மாவீரர் ஒருவரின் கல்லறைக்கு முன்பாக பெண் ஒருவர் அஞ்சலி செலுத்துவதை இரண்டாம் படத்திலும் காணலாம்.

## யாழ். மாவட்டத்தில்

# 150 மில்லியன் ரூபா செலவில் நீர்வளப் பாதுகாப்புத் திட்டம்

(கொழும்பு)

பேராசிரியர் ஜெயலத் ஜெயவர்தனவின் தலைமையில் இயங்கும் புனர்வாழ்வளிப்பு, இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்த்துகை அமைச்சு- யாழ். மாவட்டத்தில் யாழ். நீர்வள சூழலியல் பாதுகாப்புத்திட்டத்தை செயற்படுத்துகின்றது.

அமைச்சர் - நோர்வே அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக, இத்திட்டத்திற்கென 150 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.

யாழ். நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பின்வரும் 5 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

• வழுக்கியாற்று ஏரியில் உப்பு சேர்வதைத் தடுத்து, நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைத்தல் - உப்பாறு ஏரியில் உப்பு சேர்வதைத் தடுத்தலும், தடை வரம்புகளை மீளமைத்தலும் - யாழ். நகர எல்லைக்குள் உள்ள குளங்களையும், வாய்க்கால்களையும் புனரமைத்தல்- திண்மக்கழிவுகளை உபயோகித்து கூட்டெரு தயாரித்தல் - மழை நீர் சேகரித்தல் என்பனவே அவையாகும்.

இத்திட்டம் இவ்வாண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கள ஆய்வுகள் நிறைவுற்றுள்ளன. கட்டுமான வேலைகளுக்கான வடிவமைப்புகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், திட்ட அலுவலகத்திற்கு இவை தொடர்பாக ஒத்துழைப்பினை வழங்கியது.

அரியாலையிலும் அராலியிலும் அமைந்துள்ள அணைக்கட்டுகள், அவற்றுக்கான தடுப்புக்கதவுகள் புனரமைக்கப்படவுள்ளன. யாழ். மாவட்டம் எதிர்நோக்கியுள்ள சூழலியல் பிரச்சினைகள் பற்றி ஆய்வுகள் நடத்துவதற்காக, ஒரு தனியான ஆய்வுகூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

யாழ் நகரில் உள்ள கழிவு வாய்க்கால்கள் நீர் வழிந்தோடக் கூடிய வகையில் சுத்திகரிக்கப்படுகின்றன. திண்மக்கழிவு அகற்றல், கூட்டெரு ஆலை அமைத்தல், மழைநீர் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

3 வருட கால எல்லைக்குள் செயற்படுத்தப்படும் இத்திட்டம் 2006 ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்படும் என மேலதிக செயலாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்

# கிரனைட் தாக்குதலில் மூன்று இளைஞர்கள் பலி!

## எகலியகொடவில் சம்பவம்

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எகலியகொடவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில், மூன்று இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்தனர்.

ஓட்டோ ஒன்றில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்கள்மீது, இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவரே கிரனைட் வீசித் தாக்குதல் நடத்தியதாகவும், இந்தச் சம்பவத்தின்போது, ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த மூன்று இளைஞர்களும் கொல்லப்பட்டனர். அத்துடன், வீதியில் நின்றிருந்த நான்கு பொதுமக்கள் காயமுற்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, பொலிஸார் உடனடியாக ஒரு சந்தேகநபரைக் கைது செய்ததுடன், மேலும் ஆறு சந்தேகநபர்களைத் தேடி, தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

## உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த

# பொம்மைவெளிப் பகுதி படையதிகாரிகளினால் பொதுமக்களிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொம்மைவெளிப்பகுதியின் ஒரு பகுதி, நேற்று படையினரால் - பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது. நாவாந்துறை மற்றும் பொம்மைவெளிப்பகுதிகளை அண்டிய கடற்கரைப்பிரதேசம், இதுவரை காலமும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் - உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது.

இதனால், மக்கள் குடியிருக்க நிலம் இன்றிப் பொம்மைவெளிப் பகுதிலுள்ள தரவைப் பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்திருந்தனர். மாரிகாலம் ஆரம்பித்த காரணத்தினால், குடியிருப்புக்களுக்குள் வெள்ளம்புகுந்து, குடியிருக்க முடியாத அவலநிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பாகப் பொதுமக்களால் - இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்தே, உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள் குடியமர வழி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை படையதிகாரிகள் - அமைச்சர் மகேஸ்வரன் முன்னிலையில், பொதுமக்களிடம் இந்தக் குடியிருப்புக்களைக் கையளித்தனர்.

இந்நிகழ்வில் 512 ஆவது பிரிகேட் படைத்தள இராணுவத் தளபதி கேணல் உடவத்தை உட்பட, பல உயர் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். நிலப்பகுதி கையளிக்கப்பட்டதையடுத்து, இந்தப் பகுதிகளில் மக்கள் வீடுகளை அமைத்து குடியேறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், எதுவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருகின்றனர். மலசலகூடம், குடிநீர் வசதிகள்கூட இவர்களுக்கு இதுவரை செய்துகொடுக்கப்படவில்லை. அத்துடன், யாழ்.மாநகர சபையினரும் குப்பை கூழங்களை இப்பகுதியிலேயே கொட்டிவருவதனால், பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நல்லூர் பிரதேசசபையின் ஏற்பாட்டில் சுகாதார விழிப்புணர்வுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மழைகாலம் தொடங்கியுள்ளதால், தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் நோக்குடன், சுகாதார விழிப்புணர்வு திட்டத்தினை நல்லூர் பிரதேசசபை முன்னெடுக்கவுள்ளது.

இதன் முதல்கட்டமாக - நல்லூர் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட குடியிருப்புப் பகுதிகளின் வீதிகள் துப்பரவு செய்தல், கிணறுகளுக்கு குளோரின் இடல், மலசல குழிகளைப் பாதுகாப்புக்கான முறையில் பாவிப்பதற்கான அறிவுறுத்தல் போன்றவற்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. சனசமூக நிலையங்களுடன் இணைந்தும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, நேற்று வாகீஸ்வரி சனசமூகநிலையத்துடன் இணைந்து, அப்பகுதி மக்களின் சுகாதார நிலையினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இப்பகுதி மக்களுக்குச் சுகாதார விழிப்புணர்வு தொடர்பான திரைப்படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. (205)

## ஆலயம் புனரமைப்பு

மருதங்கேணி பரமசிவன் கதிரேசன் ஆலயம், கடந்த வாரம் பாலஸ்தானம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தை 75 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கு திருப்பணி சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த ஆலயம் 1997 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்து, 1998 ஆம் ஆண்டு திருத்த வேலைகள் செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையால் மீண்டும் முற்றாக சேதமடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# சுற்றுச்சூழல் தொடர்பான மூன்றாம் நாள் கருத்தமர்வு

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கின் சுற்றுசசூழல் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வுகள், நாளை காலை ஆரம்பமாகவுள்ளது.

மூன்றாம் நாள் - காலை அமர்வு "இயற்கைவள மாசுபாடு" மற்றும் "பொதுச்சுகாதாரம்" எனும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் றொகான இராஜபக்ஸ தலைமை தாங்கவுள்ளார். சிறப்பு அதிதியான பேராசிரியர் என்.சண் முகரத்தினத்தின் உரையும் இந்நிகழ்வில் இடம்பெறும்.

மாலை அமர்வின் மையக்கருத்து- 'சூழல் முகாமைத்துவத்தில் நவீன சாதனங்கள்' என்பதாகும். கலாநிதி பி.லோகநாதனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பேராசிரியர் அன்டேர்ஸ் நோர்மன் சிறப்பு அதிதியாகப் பங்குபற்றுவார். முதல் மூன்று நாட்களிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சார்பான குழுநிலைக் கலந்துரையாடல் - நானகாம் நாள் காலை நிகழ்வில் இடம் பெறுவதுடன் கலந்துரையாடலின் பெறுபேறுகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இறுதிநாள் மாலை நிகழ்வுக்கு - கலாநிதி ஜோய் மகேஸ்வரன் தலைமை தாங்குவார். இந்த நிகழ்வின் முடிவில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சூழல் முகாமைத்துவம் தொடர்பான செயற்திட்டங்கள் வடிவமைக்கப்படவுள்ளன. அத்துடன், பேராசிரியர் என்.ஸ்ரீஸ்கந்தராஜா தொகுப்புரையை வழங்குவார்.





உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பொம்மைவெளிப் பகுதியை பொதுமக்களிடம் மீள ஒப்படைக்கும்நிகழ்வில் அமைச்சர் மகேஸ்வரனுடன் படையதிகாரிகள் உரையாடுவதையும்,

இந்தப் பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்று வாழ்ந்து வரும் குடியிருப்பு ஒன்றையும் படத்தில் காணலாம்.


## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : ச.ருஷாஜினி
முகவரி : செட்டியவூர், தொண்டமனாறு.

பெயர் : சி.சினேகா
முகவரி : பழவத்தை, பொலிகண்டி.





பெயர் : இ.அபிசயன்
முகவரி : கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.

### இரண்டாவது அகவையில்

பெயர் : ஜெ.வினு
முகவரி : கிருஷ்ணா நகைத்தொழிலகம், சாவகச்சேரி.



**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------------

முகவரி :------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------
பெற்றோர் ஒப்பம்


# இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் படையினருக்கும் தொடர்பேதுமில்லையாம்

## 524 ஆவது படைப்பிரிவு கூறுகிறது

வல்லிபுரக்கோயில் பகுதியில், இளைஞர்கள் தாக்கப்பட்டமைக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என, 524 ஆவது படைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பதிகாரி - றுவான் சந்திரசேகரா மற்றும் விசாரணை அதிகாரிகளான பாரூஸ், சுவேந்திரன் ஆகியோர் - கடந்த சனிக்கிழமை முயல் பிடிக்கச்சென்ற இளைஞர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரித்தபோதே, வல்லிபுர கோயில் பகுதியில் நிலைகொண்டுள்ள 524 ஆவது படைப்பிரிவினர் அதனை மறுத்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிதொடக்கம் சுமார் ஒருமணித்தியாலயங்கள் இந்த விசாரணை இடம்பெற்றது.

இதுதொடர்பான விசாரணைகள் மீண்டும் அடுத்த வாரமும் இடம் பெறவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில், ஏழுபேர் தாக்கப்பட்டனர். இவர்களில் இருவர் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# ஊர்காவற்துறை கடற்படைமுகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது

ஊர்காவற்றுறை - கரம்பொன் கண்ணகை அம்மன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள கடற்படைமுகாம் - கடற்படையினரால் பலப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முகாமைச் சுற்றி பாரிய மண்ணணைகள் அமைக்கப்பட்டு வருவதுடன், காவலரண்களையும் கடற்படையினர் புனரமைத்து வருகின்றனர். அத்துடன், புதிய முள்ளுக்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டு, முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்.குடாநாட்டின் நகரப்பகுதி மற்றும் சில பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (83)

## திரை விமர்சனம்

# நதிக்கரையினிலே



முஸ்லிம் சட்டங்களுக்கு எதிராக ஒரு புயலை கிளப்பியிருக்கிறார் பொன்வண்ணன். மூன்றுமுறை 'தலாக்' சொல்லிவிட்டால், உயிருக்கு உயிராக பரிமாறிக்கொண்ட சொந்தம் இல்லையென்று ஆகிவிடுமா? சுளீரென்ற சாட்டையடியுடன் படத்தை முடிக்கிறார் இயக்குநர்.

தன் இரண்டாவது மகளுக்கு மணமுடிக்க நினைக்கும் ஏழை மகமத்கான், மூத்தமாப்பிள்ளை நசீரிடம் பணவுதவி கேட்கிறார். அவராலும் முடியாத சூழ்நிலை. மாப்பிள்ளையிடம் கோபித்துக்கொண்டு, தந்திரமாகத் தன் மூத்த மகள் ஜமீலாவை வீட்டிற்கு அழைத்து வந்துவிடுகிறார். ஆனால், இரண்டாவது மகள் திருமணத்திற்கு ஜமீலாவின் நகைகளை உபயோகப்படுத்திக்கொள்ளும் தந்தை, கணவன் - மனைவியை ஒன்று சேர்த்தால் நகைக்குப் பதில் சொல்லவேண்டுமே என்பதற்காக, மருமகனிடம் இருந்து 'தலாக்' வாங்குகிறார். வழக்கம்போல் இந்தமுறையும் தந்திரமாக.

பொங்கியெழுகிறாள் ஜமீலா. பெற்றமகளின் மனக்குமுறல் அப்பாவைத் திருத்துகிறது. ஆனாலும், 'தலாக்' சொல்லிவிட்டால், பிறகு சேர்ந்துவாழ இடமில்லை என்கிறது முஸ்லிம் சட்டம். அப்படிச் சேர்ந்துவாழ வேண்டும் என்றால், அவள் விதவையாக அல்லது கணவனிடமிருந்து பிரிந்து வாழ்பவளாக இருக்கவேண்டும். சட்டத்தின்படியே ஜமீலாவுக்கு ஒருநாள் கணவனாக ஒருவனை அழைத்து வருகிறார்கள். மறுபடி 'தலாக்'. பிறகு முதல் கணவனுடன் சேர்ந்து விடலாம்.

குடும்ப உறவுகளை மலர்ச்சங்கிலியாகப் பின்னியிருக்கிறார் இயக்குநர் பொன்வண்ணன். ஜமீலாவாக சுவலட்சுமி, சத்யஜித்ரேவின் கண்டுபிடிப்பு. கால ஓட்டத்தில் சின்னத்திரைக்குள் புகுந்துகொண்டாலும், அகலத் திரைகளில் குறிப்பிடவேண்டிய நடிகை. ராமிஜியும் உயிர்கொடுத்திருக்கிறார் நசீருக்கு.

இடையில் செருகப்பட்ட நகைச்சுவைப் பாத்திரங்களும், அவர்களின் சேட்டைகளும் நல்ல கோலத்தின்மீது விழுந்த நரகல்.

சாரா அபுபக்கல் என்ற கன்னட பெண் எழுத்தாளர் எழுதிய 'சந்திரகிரி ஆற்றங்கரையினிலே' என்ற நாவலைப் படமாக்கியிருக்கிறார் பொன்வண்ணன்.

**சுதர்ஷி**






# சூரிய கிரகணம்

அண்மையில் ஏற்பட்ட சூரிய கிரகணம் 2 நிமிடங்கள் மாத்திரம் பார்க்கக் கூடியதாக அமைந்திருந்தது. இது அந்தாட்டிக்கா எனப்படும் துருவப்பகுதியில் நன்கு பார்க்கப்பகூடியதாக அமைந்திருந்தது.

அந்தாட்டிக்கா கண்டப்பகுதியில் சூரிய கிரகணம் 5000 கி.மீற்றர் நீள மான - வில் (ARE) ஒன்றை உருவாக்கி இருந்தது. இதைத் தெளிவாகப் பார்வையிடுவதற்கு - வானவியல் ஆய்வில் ஈடுபாடுள்ள 300 வரையான விஞ்ஞானிகளும், அறிஞர்களும் 747 போயிங் விமானத்தில் பிரயாணம் செய்தவாறு அவதானித்துள்ளார்கள்.

அத்துடன், ரஷ்யாவின் அந்தாட்டிக் தளத்தில் உள்ள கடல்த்தளத்திற்கு அருகிலுள்ள மிர்னி என்ற இடத்தில் உல்லாசக் கப்பலில் இருந்தவாறும், பிரயாணிகள் இந்த சூரியகிரகணத்தை அவதானித்தார்கள்.

பனிச்சறுக்கல் விளையாட்டில் ஈடுபட்டோர். 3 கிலோ மீற்றர் வரை சூரிய கிரகணத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்காக பிரயாணம் செய்துள்ளார்கள். அடுத்த சூரியகிரகணம் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஏற்படும் எனவும், அதை பசுபிக்சமுத்திரப் பகுதியில் தெளிவாகப் பார்க்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# பிளாஸ்ரிக்

இன்று உலகில் பிளாஸ்ரிக் பாவனை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், பிளாஸ்ரிக் அழித்து விடமுடியாத ஒரு பொருளாகவும் அமைந்துள்ளது. இதனால், பிளாஸ்ரிக்கை மீண்டும் பாவிக்கக்கூடிய பொருளாக (RECYELT) மாற்றுவது கடினமாக அமைந்திருந்தது.

இவற்றை எரித்து அழிக்காது, வேறுவழிகளில் அவற்றை மாற்றுவதற்கான ஆய்வுகளில் விஞ்ஞானிகள் வெற்றி அடைந்துள்ளார்கள். தற்போது பிளாஸ்ரிக்கை உயர்வெப்பநிலையில் சூடாக்கி, அதன்மூலம் மாற்றுப் பொருட்களை உருவாக்கி வருகிறார்கள்.


# சட்டவிரோத மிருகக் கடத்தல்



தாய்லாந்தில் சட்டவிரோதமாக மிருகங் களைக் கடத்துவதைக் கண்காணிப்பதற்கு, பாட சாலைச் சிறுவர்களுக்கு பயிற்சி கொடுக்க திட்டமிட்டுள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், தாய்லாந்தில் உள்ள 500 பாடசாலைச் சிறுவர்களுக்கு மிருகங் களை அடையாளம் காண்பதற்கு பயிற்சி கொடுப்பதற்கு, உலக வனவிலங்குகள் நிதியம் (WWF) திட்டமிட்டுள்ளது.

இந்த அமைப்பைச்சார்ந்த அதிகாரிகள் பாடசாலைகளுக்குச் சென்று, சிறுவர்களுக்கு உலகில் அருகிவரும் வன விலங்குகளை எவ்வாறு அடையாளம் காண்பதது என்பதற்கான பயிற்சிகளை கொடுத்து வருகின்றார்கள்.



தாய்லாந்து சந்தைகளில் - புலி, கரடி, மீன் வகைகள், சில அரிதாகிவரும் தாவ ரங்கள் ஆகியவற்றைக் கடத்துவதைக் கண்டால், சிறுவர்கள் அதை எவ்வாறு அறி விப்பது என்பதற்கு, சில தொலைபேசி எண்களை அவர்களிடம் தெரிவித்துள்ளார்கள். இதன்மூலம் இவற்றைக் கடத்துபவர்களை இலகுவில் கைதுசெய்ய முடிவதாகவும் அது தொடர்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்ற மாதம் வீடு ஒன்றில் கடத்துவதற்கு தயாராக வைத்திருந்த புலி, கரடி, ஓரங்குட்டான் (**Orangutans**) எனப்படும் குரங்குகள் ஆகியவற்றை அவர்களுக்கு கிடைத்த தகவல்கள் மூலம் காப்பாற்ற முடிந்தது.

# கொரில்லா




எந்த உயிரினத்திலும் - அல்பினோ (**Albino**) எனப்படும் வெள்ளைநிற உடலும், சிவப்புநிற கண்மணியும் கொண்ட அமைப்பு தற்செயலாக ஏற்படுவதுண்டு. ஸ்பெயினில் இருந்த அல்பினோ கொரில்லா - புற்றுநோயால் மரணமடைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு இந்தக் குரங் கிற்கு புற்றுநோய் ஏற்பட்டது. இந்தக் கொரில்லா 140 கி.கிராம் நிறை கொண்டதாக இருந்தது. இந்தக் குரங்கு யோகட் (**Yogurt**) எனப்படும் தயிரை விரும்பி உண் டதாகத் தெரிவிக்கப்பட்டது. சில மரபணுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டபின் இதன் உடல் தகனம் செய்யப்பட்டது.

கொரில்லாக்கள் மனிதனின் நெருங்கிய உறவினரா கக் கருதப்பட்டு வந்துள்ளன.

இதன் புகலிடம் தொடர்ந்து அழிக்கப்பட்டு வந் துள்ளதால், இவ்வினம் அழிந்துசென்று முற்றாகவே உலகிலிருந்து அற்றுப்போகும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது. ஆபிரிக்காவில் சில குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரமே கொரில்லாக்கள் காணப்படுகின்றன.

# செவ்வாய்க் கிரகம்



செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்கலமொன்றில், அந்தக் கிரகத்தில் மனிதர்கள் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அங்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கென, தயாரிக்கப்பட்டிருந்த உபகரணமொன்று, சூரியனின் அதிகூடிய வெப்பமான ஒளியினால் செயலிழந்துள்ள தாக அமெரிக்க விண்வெளி அமைப்பு தெரிவித் துள்ளது. இவற்றின் தாக்கத்தால் இரு ஜப்பானி செயற்கைக்கோள்கள் பாதிப்படைந்திருந்தன. இதனால், ஆகாய விமானம், கடற்கப்பல்களில் பிரயாணங்களை மேற்கொள்வதற்கான தொலைத்தொடர்புகளையும் பாதிப்படையச்செய்துள்ளன.

ஒரு மாதத்திற்குமுன் சூரியன் இதுவரை பதி யப்படாத அளவிற்கு அதிவெப்பமான ஒளிக்கீற்றுக் களை வெளிவிட்டிருந்தது. கதிர்வீச்சும், மின்னேற் றப்பட்ட துணிக்கைகளும் (CHARGED PARTIELES) அதிவேகமாக சூரியனிலிருந்து வெளியேறி, செவ்வாய்க்கிரகத்தை நோக்கிச் சென்று, அங்கு இரண்டு ஆண்டுகள் சுற்றிக்கொண்டிருக்கும் கலத்தில் சேதங் களை உருவாக்கியிருந்தது.

இதேநேரத்தில், அமெரிக்காவின் இந்தக்கலம், பிரித்தானியாவின் பீகிள் 2 (**BEAGLE 2**) எனப்படும் விண்கலமொன்றுடன், தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளது. பீகில் 2 கிறிஸ்மஸ் அன்று செவ்வாயில் தரையிறங்கவுள்ளது. பீகில் 2 செவ்வாயில் இறங்கியுள்ளதை பூமிக்கு அறிவிக்கவும் இந்த அமெரிக்கக் கலம் தயார் நிலையில் செவ்வாய்க்கிரகத்தை வலம்வந்துகொண்டிருக்கிறது.

# வீனஸ் கிரகம்



வீனஸ் கிரகத்தின் மேட்டு நிலங்களில் பளபளப்பான கடின உலோகங்கள் (**Heavy metal**) காணப்படுவதாக வோஷிங்ரன் பல்கலைக்கழகத்தின் விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். இந்த மேட்டு நிலப்பிரதேசங்களில் வெள்ளி போன்ற உலோகங்கள் ஆவியாகிப் பின் குளிர்வதால், மேற்பரப்பு பளபளப்பாக அமைந்துள்ளதெனத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மேற்பரப் புக்களில் காணப்படும் ஈயம் (Lead), பிஷ்மத் (**Bismuth**) ஆகிய உலோகங்களே, இவற்றின் பிரகாசத்திற்குக் காரணம் எனக்கண்டுள்ளார்கள்.

விண்வெளியில் பிரயாணம் செய்யும் கலங்களில் (**Space Craft**) பொருத்தியுள்ள ராடர்களில், இந்த மேட்டு நிலங்கள் மிகவும் பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்கள். காலை, மாலை நேரங்களில் காணப்படும் பிரதிபலிப்பால், இந்தக் கிரகத்திற்கு உரோமானியர்கள் காதல்தேவதையான 'வனஸ' எனப் பெயரிடுவதற்குத் துண்டியதாகச் சொல்லப்படுகின்றது. இந்தக் கிரகத்தைச் சுற்றியுள்ள வளிமண்டல பிரதேசம் - முக்கியமாக காபனீரொக்சைட்டினால் சூழப்பட்டுள்ளதால், பச்சைவீட்டு விளைவு (**Green House Effect**) அதிகரிப்பிற்கு வழி வகுத்துள்ளது. இதனால், வீனஸ் கிரகத்தை அண்மித்த பகுதி மிகவும் வெப்பம் மிகுந்ததாகக் காணப்படுகின்றது.

இதனால், இந்தக் கிரகத்தின் வெப்பநிலை 467 செல்சியஸ் எனக் கணிக கப்பட்டுள்ளது. மேலும் இக்கிரகத்தின் வளிமண்டல அமுக்கம் - பூமியின் அமுக்கத்தைவிட 90 மடங்கு அதிகமானது எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

# கடலுக்கடியில் விமானம்

ரைட் சகோதரர்கள் ஒரு நூற்றாண்டிற்கு முன் ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தனர். இன்று கடலுக்கடியில் பிரயாணம் செய்யும் விமானமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. கடலுக்கடியில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு, வாரக்கணக்கில் பிரயாணம் செய்யக்கூடிய விமானத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள்.


இவற்றிற்குக் கடலில் பிரயாணம் செய்யும் கப்பல்களுக்கு இருப்பது போன்று புரெபு லர்களோ (**PROPELLERS**), விமானத்தில் உள்ளது போன்று ஜெட் என்ஜின்களோ கிடையாது. நீரை உள்ளே இழுத்து, அதை வேகமாக வெளியேற்றுவதில் கிடைக்கும் சக்தியில் முன்னோக்கி, நீரினுள் செல்லமுடிகிறது. மின்கலததில் இயங்கும் இவ்வகையான கடலின் அடிப்பாகத்தில் பிரயாணம் செய்யும் விமானங்களுக்கு, கடல் தொடர்பான ஆய்வில் ஈடுபடும் விஞ்ஞானிகளிடையே மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதனமூலம் கடலின் அடியில் ஏற்படும் அலைகள், கடல்நீர் உப்புத்தன்மை (**SALINITY**), வெப்பநிலை ஆகியவற்றை அறியமுடியும் எனவும் அவர்கள் கருதுகின்றார்கள். மேலும் கடலில் ஏற்படும் சூழல்மாசடைவையும் இதன்மூலம் (**POLLUTION**) அறிந்துகொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அருகிவரும் குரங்கினம்

உலகின் வாலில்லாத குரங்கினங்களான கொரில்லா, சிம் பன்சி, பிக்மி சிம்பன்சி, ஒராங் சரான் ஆகியன ஆபத்தை எதிரநோக்கியுள்ளன. இந்த இனக் குரங்கின் **DNA** எனப்படும் மரபணுவில், 96% மனிதனின் மரபணுவுடன் ஒத்திருப்பதாக அறியப்பட்டுள்ளது. இவைகள் அழிந்துவிடும்போது, மனித இனத் தின் மூதாதையர்களின் சுவடுகள் அழிந்துவிடுமென விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதனின் மூன்று செயற்பாடுகள் இந்த இனக் குரங்குகளின் அழிவுக்குக் காரணமாகும். போர், சட்டவிரோதமாக இந்தக் குரங்குகளைக் கொல்லுதல், குரங்குகளை உயிருடன் விற்பனை செய்தல் ஆகியன, இவற்றை அருகிவரும் விலங்காக மாற்றியுள் ளது. மேலும் காடுகள் அழிக்கப்படும்போது, இவற்றின் புகலிட மும் (**HABITATS**) இல்லாது போயவிடுகின்றன. இந்த இனக் குரங் குகள் - மனிதன் இலகுவில் செல்லமுடியாத காடுகளின் உட்பகுதி யில் வாழ்வதால், ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் துணை யுடன், செயற்கைக்கோள்மூலம் இவற்றின் நடமாட்டங்கள் அருகிக் கொண்டு செல்லும்நிலையை ஆராய்ந்து வருகிறார்கள். யுனெஸ்கோ (**UNESCO**) அதிகாரியான சாமிமன்கொற்றோ குறிப்பி டும்போது- உஷ்ணவலயக் காடுகளில் (**TROPICAC FOREST**) வளர்ச்சிக்கு இந்த இனக்குரங்குகள் உதவிபுரிவதாகவும், பழங் களின் விதைகளைப் பல்வேறு இடங்களுக்கு பரப்புவதற்கும், அடர்ந்துள்ள மரங்களுக்கூடாக (**CANOPY**) ஒளிக்கதிரை உள்ளே செல்வதற்கும் உதவிபுரிவதாகவும் தெரிவித்தார்.

# ஓநாய்கள்



எதியோப்பியாவிலுள்ள ஓநாய்கள் இன்று அருகி வருகின்ற ஒரு இனமாகக் கருதப்படுகின்றது. இந்த ஓநாய் கள்- தற்போது நாய்களுக்கு ஏற்படும் விசர்நோயினால் (**RABIES**) பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நோயினால் இதுவரை 30 வரையான ஓநாய்கள் மரணமடைந்துள்ளன.

உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியம் (**WWF**) -எதியோப்பியாவின் தென்பகுதியில் வாழும் இந்த ஓநாய் களை - விசர்நோய் மிகவும் பாதித்துள்ளதாகத் தெரிவித்துள் ளது.


இந்த அமைப்பு - பாதிக்கப்பட்ட ஓநாய்களைத் தனிமைப்படுத்தி, அவற் றிற்குத் தடுப்பூசி ஏற்றுவதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த ஓநாய்கள் வாழும் வனவிலங்கு சரணாலயத்திற்கு அருகில் குடிபெயர்ந்துள்ள மக்க ளும், இந்த ஓநாய்களால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. இவ்விலங்குகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டத்திற்கு, நிதி உதவியை உலக வனவிலங்கு நிதியம் (**WWF**) திரட்டுவதற்குத் தீர்மானித்துள்ளது. மேலும், அந்தப் பிரதேசத்தில் குடியிருப்பவர்களின் நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கும், ஆண்மை இழக்கச்செய்வதற்கும் (**STERILSE**) திட்ட மிட்டுள்ளது. அப்பிரதேசத்திலுள்ள நாய்கள் - இந்த நோயை ஓநாய் களுக்குப் பரப்புவதோடு மாத்திரமல்லாது, ஓநாய்களுடனான புணர்ச்சியின் (**MATE**) மூலம், ஓநாய்களின் பரம்பரை அலகின் தனித்தன்மையையும் மாற்றமுயல்கின்றது. மேலும் அப்பிரதேசத்தில் வாழும் குடியேற்றவாசிகள் - தமது மந்தைகளின் மேய்ச்சல் நிலமாக இப்பிரதேசத்தைப் பாவித்து வருகின்றனர். இவற்றின்மூலம் அப்பிரதேசத்தில் வாழும் எலிகளை (**RODENTS**) வேறு இடங்களுக்கு இடம்பெயர வைத்துள்ளார்கள்.



இதனமூலம் ஓநாய்கள் தமது பிரதான உணவையும் இழக்க நேரிட்டுள்ளது.

# வாரம் ஒரு யோகாசனம்

## சிம்மாசனம்



முதல் நிலையாக முழங்கால்களை தரையில் ஊன்றி, விரைகளின் கீழ் நரம் புகள் தொடைகளின் பின் பகுதியைத் தொடும்படி வலது இடதுகணுக்கால்களை முழங்கால்களின் மேல் வைத்துக்கொண்டு, நாக்கை வெளியே நீட்டி, பார்வையை மூக்கின் நுனி மீது அல்லது புருவங்களுக்கு இடையில் நிலைக்கச் செய்ய வேண்டும். அல்லது கைவிரல்களை முழங் கால்களுக்கு இடையே கொண்டிருக்க வேண் டும். சிங்கம் முன்னங்கால்களின் மேல் உட் கார்ந்திருப்பது போன்ற தோற்றம் கொண்டி ருப்பதனால், இப்பெயர் உண்டாயிற்று. இவ்வா சனம் 4 நிமிடம் செய்தால் போதுமானது.


### நன்மைகள்

மார்பு பரந்து வனப்பும், உடல் செழிப்பும் பெறும். கண்களும், நாக்கும் மலர்ந்து, கழுத்து நரம்புகள் திடப்படும். கண்களின் ஒளிமிகும், காசநோய் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும், வயிற்றில் அஜீரணம் முதலியவை நீங் கும். சடராக்கனி வளரும். ஊக்கம் மிகும்.

*தருபவர் - மா.மகாதேசன்*

# தாவரங்களும் ஒளித்தொகுப்பும்





தாவரங்கள் சுவாசத்தின்போது காபனீரொட் சைட்டை வெளிவிடுகின்றன. மேலும், வளிமண்டத் தில் பல்வேறு முறைகளில் காபனீரொசைட்டின் செறிவு அதிகரிக்கின்றது. இவற்றை பச்சைவீட்டு விளைவு (**GREEN HOURSE EFFECT**) என அழைக்கப்படு கின்றது. இந்தநிலையில் வெப்பநிலையும் அதிகரிக் கின்றது.

அமேசன் பிரதேசத்தில் வெப்ப அதிகரிப்பைக் கட்டுப்படுத்த மரங்களை நாட்டியிருந்தார்கள். ஆனால், அவர்களால் எதிர்பார்த்த அளவு வெற்றி யைப் பெறமுடியவில்லை. மரங்கள் சுவாசத்தின்போது வெளியேற்றிய காபனீரொட்சைட்டு, அவை ஒளித் தொகுப்பின்போது உறுஞ்சிக் கொண்ட காபனீ ரொட்சைட்டிலும் கூடுதலாக இருந்ததே காரணம் என்பதை அறிந்துகொண்டனர்.

இது தொடர்பாகப் பிரேசில், அமெரிக்க விஞ்ஞா னிகள் மேற்கொண்ட ஆய்வுகளின்மூலம், மரங்களுக்கும் காபனீரொட்சைட் டிற்கும் இடையேயுள்ள தொடர்புகள் சிக்கல் மிகுந்தவை என்பதை அறிந்து கொண்டார்கள். வரட்சி அல்லது வேறு காரணங்களினால் காட்டுமரங்கள் அழிந்து போகும் நேரத்தில், வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் செறிவை அதிகரிக்கச் செய்கின்றன. அத்துடன், அழிந்துபோன இந்த மரங்கள்- ஈரலிப்பான காலத்தில் மேலும் சிதைவடைவதால், வளிமண்டத்தில் காபனீரொட்சைட்டின் செறிவை மேலும் அதிகரிப்பதாக அவர்களது ஆய்வின்மூலம் தெரிந்துகொண்டுள்ளார்கள்.

# அன்று தமிழ் இன அழிப்பை எதிர்த்து உலகம் குரல் கொடுக்காதது ஏன்?

இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணப்படவேண்டுமென்று, பேசுகிறவர்கள் எல்லோரும் - விடுதலைப் புலிகள் ஜனநாயகவழிக்குத் திரும்பவேண்மென்று கிளிப்பிள்ளைபோலச் சொல்லத்தவறுவதில்லை.

வன்செயல்களைக் கைவிட வேண்டுமென்றும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டுமென்றும் புத்திமதி சொல்லுவார்கள்.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, 1977 ஆம் ஆண்டுவரை ஜனநாயகத்திற்கு மதிப்புக்கொடுத்தே தமிழ் மக்கள் நடந்து வந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற ஓராண்டிலேயே மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் - ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்ட பெரும்பான்மை ஜன நாயகத்தினால் பறிக்கப்பட்டது.

மலையத்தமிழ்த் தலைவர்கள் காந்தீயமுறையில் சத்தியாக்கிரகம் செய்து, தங்கள் உரிமைகள் பறிக்



கபபட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, மலையகத் தலைவர்கள் பொலிஸ் வாகனங்களில் பலாத்காரமாக ஏற்றிச்செல்லப்பட்டு, பலமைல்களுக்கப்பால் இறக்கிவிட்டு, திரும்பி நடந்து செல்லும்படி தண்டிக்கப்பட்டனர்.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே உத்தியோகமொழி என்று, சட்டம் கொண்டு வந்து, தமிழ்மொழியைப் புறக்கணித்து, தமிழர்களின் வேலை வாய்ப்பையும் இழப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது, தமிழரசுக்கட்சியும் மற்றும் கட்சிகளும், சுயேச்சைகளும், முஸ்லிம்களும், தமிழர்களும நாடாளுமன்றத்தில் ஒரே குரலில் எதிர்த்தனர். அப்பொழுதும் தமிழ் மக்களின் ஜனநாயகம்- சிங்களப் பெரும்பான்மை ஜன நாயகத்தினால் நிராகரிக்கப்பட்டது.

அப்பொழுதும் இன்றுபோல் ஜனநாயகம் பேசிய பெரும்பான்மைச் சிங்களவர்களின் அரசாங்கங்கள் - தமிழ்மக்களின ஜனநாயக பூமியாகிய வடக்கு-கிழக்கில், திட்டமிட்டு சிங்களவர்களுக்குச் சகல உதவிகளும் அளித்துக் குடியேற்றினர்.



திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களால் - தமிழரின் நிலப்பரப்புக் குறைக்கப்பட்டதுடன், சிங்களத் தொகுதிகள்- தமிழ்ப் பகுதிகளில் உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சிங்களப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது.

ஜனநாயகத்தின் பெயரால் சிங்களப்பெரும்பான்மை ஜன நாயகம் மேற்கொண்ட இந்தநடவடிக்கைகளுக்கு, நாட்டின் ஒற்றையாட்சி அரசியலமைப்பே காரணம் என்று தமிழ்த் தலைவர்கள் கூறினர். இதனால், தமிழ் மக்கள் தமது மொழி, நிலம், பண்பாட்டைப் பாதுகாக்கச் சமஷ்டி ஆட்சி அமைப்பு மூலம், தமிழ்மக் களுக்குச் சுயநிர்ணயம் வழங்கும் படி கூறினர்.

இக்கோரிக்கையை முன்வைத்து தந்தை செல்வா தலைமையில் தமிழ்மக்கள் 1961 ஆம் ஆண்டிலும், அதன் பின்னரும் காந்தீய வழியில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர். நிராயுதபாணிகளாகத் தமிழ் மக்கள் நடத்திய இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் எல்லாம், ஆயுதப்படைகளைக் கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்டன. தலைவர்கள் சிறைவைக்கப்பட்டனர்.

இனப்பிரச்சினைக்கு ஜனநாயக முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு, ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் சிங்களத்தலைவர்களோடு தமிழ்த் தலைவர்கள் பேச்சு நடத்தி, ஒப்பந்தங்களும் செய்தனர்.

இந்த ஒப்பந்தங்கள் யாவும் பெரும்பான்மைச் சமூகத்தினரின் ஆர்ப்பாட்டங்களால் கிழித்தெறியப்பட்டன. இதேசமயம் - 1958 ஆம் ஆண்டு தொடங்கி 1983 ஆம் ஆண்டு வரை தமிழ்மக்களுக்கு எதிராக நாடு முழுவதும் ஆட்சியாளர்களின் தூண்டுதலுடன் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையை, யாரும் தடடிக்கேட்கவில்லை. அப்பொழுதும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, சிறைவைக்கப்பட்டனர்.

இக்காலங்களில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கும், நேர்ந்த இழப்புக்களுக்கும் உலக நாடுகள் குரல் கொடுக்கவில்லை.

தமிழின அழிப்பு இலங்கையில் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டது. இனியும் பொறுக்கமுடியாது என்ற பின்பே, தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். அரச பயங்கரவாதத்தை - பிரபாகரன் தலைமையில் உருவான விடுதலைப் புலிவீரர்களின் படை, வெற்றி கொண்டுவருவதைச் சகிக்கமுடியாத ஆட்சியாளர்களும், பேரினவாதிகளும், 'பயங்கரவாதம்' என்று முத்திரை குத்தி, அமெரிக்காவின் சர்வதேசப் பயங்கரவாத பிரசாரத்துடன் இணைந்து, தமிழின ஒழிப்பை நிறைவேற்றத் திட்டமிட்டனர்.

**எஸ்.எம்.ஜி**

தலைவர் பிரபாகரன் இத்திட்டத்தையும் முறியடித்தார். இப்பொழுது இங்கு மனித உரிமை மீறல், பிள்ளைகளையும் படைக்குச்சேர்த்தல், ஜனநாயகம் என்றெல்லாம் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தி, மேற்கு நாடுகளையும் வளைத்து, விடுதலை வீரர்களை மீண்டும் வெறுங்கையாளர்களாக்க முனைகின்றனர்.

இப்போது காலம் மாறிவிட்டது. யார் பயங்கரவாதிகள் என்பதை உலகமும் உணர்ந்துவருகிறது.










யாழ்.மாவட்ட கலாசார அலுவலர்க்ள் கலையகத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட மாவட்ட கலாசாரவிழாவின் சில காட்சிகளை மேலுள்ள படங்களில் காணலாம்.

# வெறும் வீதி விளக்குகள் பலரின் விதியை நிர்ணயிக்கின்றன!

யாழ்.குடாநாட்டில் மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளில் - இரவு நேரங்களில் வீதிகளில் வெளிச்சமின்மையினால் ஏற்படும் இடர்களும் ஒன்றாகும். இதனை ஒரு சாதாரண பிரச்சினையாகக் கருதிவிட முடியாது. ஏனெனில் - பல்வேறு பிரச்சினைகள் நடப்பதற்கு இதுவே காரணமாக அமைகின்றமையானது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர், மின்சாரம் இல்லாதிருந்த நிலையில்- வீதிகள் மிகவும் பழுதடைந்திருந்தபோதிலும், பெருமளவிற்கு அசம்பாவிதங்கள் இடம்பெறவில்லை. இதற்கு அந்தக் காலப்பகுதியில் இங்கிருந்த நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் வலுவானதாக அமைந்திருந்தமையே காரணமாகும்.

இன்று யார் நிர்வாகம் செய்கின்றார்கள் என்ற கேள்வி எழும்பும் அளவிற்கு - யாழ்ப்பாணத்தில நிர்வாகம் சீர்குலைந்த நிலையிலுள்ளது.

இன்று மின்சாரம் புதிய இடங்களுக்கு வழங்கப்படுகின்றன. பெயரளவிலாவது மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதனைவிட, இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய வேலைகளை - வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியோடு முன்னெடுத்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் வீதி விளக்குகள் மட்டும் சீரற்றிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

மின்விளக்குகள் பொருத்துவது மின்சாரசபையின் பணியன்று, மாநகர சபை மற்றும் பிரதேசசபைகளே அவற்றுக்குப் பொறுப்பானவை எனவும் கூறப்படுகிறது.

மின்விளக்குகளின்றி மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஏராளமானவை. இந்த வீதி விளக்குகள் பற்றிய கருத்துக்கள் - கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே செல்வாக்குப் பெறத்தொடங்கிவிட்டன. கிரேக்க, உரோம இராஜ்ஜியங்களில், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இத்தகைய வீதியோர வெளிச்சக் கூண்டுகள் அமைக்கப்பட்டு, இரவில் ஒளியூட்டப்பட்டிருக்கின்றன.

இந்தியா - அசோகன் ஆட்சியிலிருந்த சமயம், வீதிகளுக்கு வெளிச்சம் ஊட்டும் பணிக்காக ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

பண்டைய இலக்கியங்கள் யாவும வீதி விளக்குகள் அமைக்கப்படுதல வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றன.

செங்கோண்மை இடம்பெறும் நாட்டில் - இரவில் வெளிச்சம் இருக்கவேண்டும் என்ற மரபு இருந்துள்ளது. இவற்றைக்கொண்டு நாட்டில் உண்மையான பாதுகாப்புடன் கூடிய வாழ்வு ஏற்படுவதற்கும், வீண் பிரச்சினைகள் உருவாவதைத் தவிர்ப்பதற்கும் - வீதி விளக்குகள் அவசியமாக உள்ளமையை அன்றே மக்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதனையும், மன்னர்கள் பலர் அதனை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் என்பதனையும் அறியமுடிகின்றது.

இத்தகைய மக்களுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய ஒரு விடயத்தில், அக்கறையீனம் கொள்வது கவலை தரும் விடயமாகும்.

யாழ்ப்பாண வீதிகள் பல சேதமடைந்த நிலையிலுள்ளன. போக்குவரத்தின்போது பெரும் சிரமங்களை மக்கள் அனுபவிக்கநேரிடுகின்றது. இந்தநிலையில், இரவுவேளைகளில் சைக்கிளில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

இரவு நேரங்களில் பயணிக்கும்புலர் - வீதி விபத்துக்களைச் சந்திக்கவும் நேரிடுகின்றது. இதனைவிட, வயதானவர்கள் வீதியின் கழிவுநீர் ஓடைகளில் வீழ்வதற்கும், வீதிகளில் உள்ள பள்ளங்களில் வீழ்வதற்கும் வெளிச்சமின்மையே காரணமாகும்.

வீதி விளக்குகள் ஒழுங்காக எரியாமல் இருப்பதால் - திருடர்களுக்கும், சமூகவிரோத சக்திகளுக்கும், விஷமிகளுக்கும் சாதகமாக அமைகின்றது.

திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டு, இலகுவில் தப்பித்துவிடுகின்றனர். உண்மையில் வெளிச்சம் இருந்தால், பல திருட்டுக்களையும், சமூகவிரோதச் செயல்களையும் தடுக்கமுடியும்.

திருடர்கள் மற்றும் சமூகவிரோதச் செயல்புரிவோர் அதிகளவில் இந்த வீதி விளக்குகளை உடைத்து செயலிழக்க வைக்கின்றனர். இவர்களை இனங்கண்டு, அடையாளங்காட்டி - பொலிஸிலோ அல்லது உரியவர்களிடமோ பிடித்துக்கொடுக்க வேண்டியது பொது மக்களின் பிரதான கடமையாகும்.

வீதிகளில் நின்று இரவுவேளைகளில் மதுபோதையில் கூச்சலிடுவோர், வீடுகளுக்குக் கல்லெறிந்து பொதுமக்களின் வாழ்வியல் அமைதியைக் குலைப்போர் - தமது கைவரிசையைக் காட்டுவதற்கும் வெளிச்சமின்மையைச் சாதகமாகப் பயன்படுத்தவே செய்கின்றனர்.

இதனைவிட, அரசியல் பழிவாங்கல் போன்ற சில குற்றங்கள் ஏற்படவும், அதேவேளை - வேறும் பலவகைப்பட்ட பெரிய ஆபத்துக்கள் ஏற்படவும் இது காரணியாக அமையும்.

பொதுமக்கள் தமது வீடுகளுக்கு முன்னாலுள்ள மின்விளக்குகளைத் தமது சொத்தாகக் கருதி பாதுகாக்க முன்வருதல்வேண்டும்.

அதேவேளை - மின்சாரசபையோ, மாநகரசபையோ, பிரதேசசபையோ தான் மின்விளக்குகளைப் பொருத்த வேண்டும் என்றெண்ணாது, தமது பிரதேச மின்விளக்குகளைத் தாமே பொருத்தி, அதனைப் பாதுகாப்பதன் மூலம், விஷமிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் உட்பட, பல ஆபத்துக்களைய்யும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

எனவே - பொது மக்கள் வீதி விளக்குகளைக் கவனமாகப் பராமரித்துப் பயன்படுத்திவந்தால், பல்வேறு இடர்களைத் தவிர்த்துக்கொள்ளவும்முடியும். பிறரின் போக்குவரத்துக்கும், பாதுகாப்புக்கும் உதவ முடியும். இதனைக் கடைப்பிடித்துப் பார்த்தால், நன்மைகள் என்னவென மேலும் விளங்கவும்முடியும்.

**செந்தணன்**

*[G.C.E. (O/L) MODEL EXAM PAPER CONTD....]*

PN.SHUTHARSON
*TEACHER*
*KOKUVIL HINDU COLLEGE*

**(10)Read the following advertisements and answer the questions given.**

## CLASSIFIEDS

### EMPLOYMENT

**Positions Vacant sales personnel**

Application are invited from candidates with good knowledge of English and computer literacy for appointment as Sales Assistants at the Colombo Book Fair on a casual basis for a period of about one month in September 2003. Those who perform duties. efficiently and to the satisfaction of the management can be considered for permanent appointments as Sales Assistants. Please apply:

personal Manager, Vijithayapa Associates, 130, S.De.S.JayasingheMawatha, Nugegoda.

25739

### EDUCATION

**BIRGHTON INTERNATIONAL MONTESSORI**

4/1 Sri sumangala Road, Ratmalana now accepting admissions for September

2- Years onwards
day care swimming
English medium only.
074.213570

**BOOKS & Magazines**
*For Sale*

**Computer Books** cheap edition. Over 2000 titles available. Largest selection, over 500 titles clearance sale at half price Robert Agencies Limited, 88, Reclamation Road, Colombo.
Tel : 421009. *Z1861*

New complete Medical and Health Encyclopaedia complete Lexicon Universal Encyclopaedia 27 volumes for sale,32/1, Duplication Road, Bambalapitiya. opposite House of Fashions. *Z 6307*

### ENTERTAINMENT

**Musical Instrument**
*& Services*

**Ancestors** in piano tuning repairs and woodwork Anne Rodrigo granddaughter of Norbert Rodrigo piano Repair Centre, Moratuwa. Phone 649434.
x9982

Undertakes piano tuning and repairs. Ranjan Fernando grandson of Norbert Rodrigo experienced 26 Years.Tel: 957029,952529. *Z7338*

Benildus Fernando piano tuning polishing repairs and electric organ repairs. Tel: 074818442 Moratuwa. *Z7329*
piano tuning polishing repairs after repairs with 5 Years guarantee. Placidus Ramanayake. Telephone 653439 Moratuwa.
*Z7264*

### REALESTATE

**FOR LEASE**
*Millennium City*
*Aturugiriya*
paradise category
tow luxury upstair
houses
cach 2160 sq.feet
fully tiled with all facilities.
**Contact 01-726712**

**YAKKALA**
**2 ACRES**
**PRIME LAND**
*For Sale.*
Ideal for
industrial or
Residential purpose
**Contact : 914924**

### General

**Palmistry & Astrology**

Accuracy assured visiting palmist & Numerologist expert Indian studies long experience Mr. Cooray 078-8626537.

**Kennel Notices**

**Free** to a kind home -lovable 2 Months old puppies. 83/1A, Colombo Road, Kendala. 074-830147. z7060

**Free to** kind home one female Mongralpuppy. 805139, 6 wks. Old. *Z6990*

**Lovers pups** for Kind home Ring 821526. *Z6690*

One stop K9 Center for boarding kennels and taming of unpredictable dogs. Call: 077752702.
*Z7706*

**Pups free** to kind homes vaccination and sterilization charges will be paid 46, Galpotha R0ad, Nawala *Z7534*

**(1) Whom Should you consult to know about your future? ..................................................**
**(2)**
**(3) What are the qualifications needed to be a sales assistant. (a) ..................... (b) ..........................**
**(4) What is the medium of instruction at Brighton montessori? ..................................................**
**(5) Under which heading in classifieds would you find sale of land houses. ...........................**

**(Marks 05)**

**(11) Read the text and fill blanks with correct form of the word given in he brackets. One has been done for you**

**David Clark 25 *(1) lives.* (live)most of time in york with his parents, but he is the world`s first mountaineering dustman. He (2) .................. (take) two trips to Mount Everest to collect rubbish left by expeditions there, and now (3) ..................... (aim) to be the youngest person to climb the world`s highest mountain. It was while he (4) ................. (work) in a climbing equipment shop that he (5) ................. (hear) about the rubbis left on Everest.He (6) ................. (look) for something really challenging to do and he really liked his idea. He is amazed at the type of junk he (7) ................ (find). At 17,000 feet he (8) .................... (come) across cornflake packets, empty food cans and hypodermic syringes and needles. So far he (9)....................... (collect) enough rubbish to cover three foot ball pitches. For the last six months. David (10) ................ (prepare) to climbto the summit of Everest. He (11) ................ (train) hard in the Himalayas and has been on a strict diet.**

**(Marks 10)**

**(12) Here are some texts. Read them. Match the topics given bellow with the appropriate text by writing the number of the text in the given box.**

1. **Turn off the light in your house when you're not using them. and when you're cooking, it's wasteful to have your cooker, whether it's Electric or gas, at maximum. Turn it down to the required temperature.**
2. **The ozone layer is being destroyed by a Number of things, one of which is aerosol sprays. Recently Super Markets and department stores have begun to sell environmentally Friendly, ozone friendly, aerosols and really I do advise that these should be used wherever possible.**
3. **Before you start to run, it's very important to warm up correctly. This means doing some stretching loosening up the muscles, because if the muscles are tight you'll pull them, and it will cause a lot of problems later on.**
4. **As for daily life, I think that will be able to order most of our shopping by computer and this will be delivered to our homes, so infact there won't be any need to go out to the shops.**
5. **This will tell me about the future, I can see a lot of travel. Yes, there ........... this is the travel line, here Let me just have a look at the other hand as well. It's this one here. This shows you're going to spend a lot of time overseas.**

| | | |
|---|---|---|
| a. | Life in the 21st century | ☐ |
| b. | Hiring a computer | ☐ |
| c. | Advice to a sportsman | ☐ |
| d. | Fortune telling | ☐ |
| e. | Saving energy | ☐ |
| f. | Instructions for jogging | ☐ |
| g. | Preventing pollution | ☐ |

**(Marks 05)**

**(13) You and the members of the Social Service club of your school visited a Home for the Elders' to mark the "Elders' Day" Write a description of your visit. Include the following.**

**- When and how you went.**
**- What you took for the inmates.**
**- How you distributed the items and helped them.**
**- Any other activities you did to entertain them.**
**- What you, they felt.**
**Use about 100 words.**

**(Marks 05)**

**(14) The Social Services Society of your school has collected aid for flood victims.As the secretary of the society write a letter to the Divisional secretary of the Divisional Secretariat in your area asking for details of distributing the items you have collected.**
**you may include**

- **The items you have collected**
- **The areas where help is needed**
- **A convenient date and permission for distribution**
- **Any special items needed**

**Use about 100 Words**

**(Marks 10)**

**(15) Write on any one of the following topicx. Use about 200 words.**

**a) Write an article to a newspaper on "The employment of child workers in the country" you may use the following guidelines.**
- **The types of work child workers are engaged in.**
- **The reasons for them to word**
- **Your suggestions for prevention of child labour.**

**b) Complete the following story.**
**Once upon a time, there was/were ....................................**

**c) What are your plants for a career? Write an article to a newspaper on "The career of mychoice" You may use these guidelines.**
- **The job you want to do**
- **The reasons for selecting it**
- **The kind of education and training required**
- **How you could be useful to the society**

**(Marks 10)**

# கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் - 2003

## கணிதம் பகுதி - II

01) **a.**சுபாஸ் ரூபா 60000 உம், ஜனகன் ரூபா 36000 உம் முதலிட்டு, வியாபாரம் ஒன்றை நடத்துகின்றனர். வியாபாரத்தை நடத்துவதற்காக மாதாந்த இலாபத்தில் 20% த்தை சமனாக இருவருக்குமிடையேயும் பங்கிடப்படுவதாயும், மீதி இலாபத்தை அவர்கள் முதலீட்டு விகிதப்படி பங்கிடுவதாயும் உடன்பாடு செய்து கொண்டனர். ஒருமாதத்தில் ரூபா 3900 இலாபமாகக் கிடைத்தால்,

1) சுபாஸ், ஜனகன் என்பவர்களது முதலீட்டு விகிதத்தைக் காண்க.
2) சுபாஸ் என்பவருக்குக் கிடைத்த மொத்த இலாபத்தை காண்க.
3) அந்த மாதத்தில் சுபாஸ் என்பவருக்கு கிடைத்த மொத்த இலாபம் அவர் முதலீடு செய்த தொகையின் என்ன சதவீதம்


**b.** 1) 0, 3/4 என்பவற்றை மூலகங்களான **x** இலுள்ள இருபடிச் சமன்பாட்டை $ax^2+bx+c=0$ எனும் வடிவில் எழுதிப் பின்னர் **a,b,c** என்பவற்றின் பெறுமானங்களை எழுதுக.

2) $Log_3(4x-3)=2$ என்பதை சுட்டி வடிவுக்கு மாற்றுவதன் மூலமோ அல்லது, வேறுமுறையிலோ **x** இன் பெறுமானத்தைக் காண்க.

**c.** கோளம் ஒன்றினுள்ளே 905 1/7 $cm^3$ கனவளவுள்ள கோளவடிவக்குழி ஒன்று உண்டு. கோளத்தினதும் குழியினதும் மையங்கள் ஒன்றே ஆகும். கோளத்தின் உலோகத்தடிப்பு 1 **cm** ஆகும். அதன் புற ஆரைக்கு சமனான ஆரையும் 10 **cm** உயரத்தையும் கொண்ட செவ்வட்ட உருளை ஒன்று உள்ளது.

1) கோளக்குழியின் ஆரையைக் காண்க.
2) உருளையின் ஆரையைக் காண்க.
3) உருளையின் வளைமேற்பரப்பினைக் காண்க.

**d.** **O** வை மையமாக உடைய வட்டத்தில் **AC** விட்டம். **B** என்பது வட்டத்தின் மீதுள்ள ஒரு புள்ளி, **PR** நாண் ஆகும்.




1) கோணம் **ABC** இன் பெறுமானம் யாது?
2) முக்கோணி **ABC** இல் **AB=BC** எனின், $AC^2=2AB^2$ எனக்காட்டுக.
3) வட்டத்தின் விட்டம் 142 **Cm** எனின், **AB** யின் நீளத்தைக் காண்க.
4) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.
5) **PQ** வுக்கும் **QR** இற்கும் இடையேயுள்ள தொடர்பை எழுதுக.

**e.** அ) பின்வருவன ஒவ்வொன்றையும் விளக்க, ஒவ்வோர் வென்வரி படம் வரைக.

1) தொடைகளின் இடைவெட்டு
2) உபதொடை
3) மூட்டற்ற தொடை

ஆ) **A,B** என்பன சூனியத்தொடை அல்லாத இரு தொடைகளாகும். **n(AuB)** இனைக் காண்பதற்கான கோவை ஒவ்வொன்றை கீழே உள்ள இரு சந்தர்பங்களிற்கும் தருக.

1) **A,B** என்பன இடைவெட்டும் தொடைகளாக உள்ளபோது
2) **A,B** என்பன மூட்டற்ற தொடைகளாக உள்ளபோது

**f.** வவுனியாவிலிருந்து கண்டிக்கு காலை 8.00 மணிக்கு புறப்படும் பேருந்து தாமதமாகப் புறப்படுவதற்கான நிகழ்தகவு 3/10 ஆகும். அப்பேருந்து தாமதமாக புறப்பட்டால், காலை 9.30 மணிக்கு புறப்படுவதற்கான நிகழ்தகவு 4/9 ஆகும். ஆனால் காலை 8.00 மணிக்கு புறப்படும் பேருந்து சரியான நேரத்திற்குப் புறப்பட்டால் 9.30 இற்கு புறப்படும் பேருந்து தாமதமாகப் புறப்படுவதற்கான நிகழ்தகவு 5/14 ஆகும்.

1) தரவை மரவரிப்படத்தில் குறித்துக்காட்டி பின்வருனவற்றின் நிகழ்தகவை காண்க.
2) இரு பேருந்தும் தாமதமாகப் புறப்படுதல்
3) இரு பேருந்தும் சரியான நேரத்திற்குப் புறப்படுதல்
4) ஏதாவது ஒரு பேருந்து மட்டும் தாமதமாகப் புறப்படுதல்.

02) **a.** இலங்கையில் உள்ள பால்மா அடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர், அவுஸ்திரேலிய டொலர் 8500 பெறுமதியான பால்மாவையும், நியூசிலாந்து டொலர் 20000 பெறுமதியான பால் மாவையும் இறக்குமதி செய்து பைக்கற்றுக்களில் அடைத்து விற்றார்.

*(அவுஸ்திரேலிய டொலர் 1 = இலங்கை ரூபா 54.50,*
*நியூசிலாந்து டொலர் 1 = இலங்கை ரூபா 48.56)*

1) பால்மாவுக்கான இறக்குமதி செலவை இலங்கை ரூபாவில் காண்க.
2) பைக்கற்றுகளில் அடைப்பதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான செலவு இறக்குமதி செலவின் 20 % எனின், மொத்தச் செலவு எவ்வளவு.
3) அவர் மொத்தச் செலவில் 10% இலாபத்தைப் பெறுவதற்கு முழுப்பால்மாவையும் விற்கவேண்டிய விலையைக் காண்க.

**b.** விற்பனையில் பெறப்படும் முதல் ரூ 35000 இற்கு 10% உம் எஞ்சியவற்றுக்கு 5% உம் தரகுக்கட்டணமாகக் கொடுப்பதாக உடன்பட்டதன் பேரில், ஏலவிற்பனையாளர் ஒருவர் காணி ஒன்றை விற்பதற்கு ஒப்புக்கொண்டார். அவருக்குத் தரகுக் கட்டணமாக ரூ 4750 கிடைத்ததெனின்:

1. 10% பணம் எவ்வளவு
2. 5% பணம் எவ்வளவு
3. காணியின் விற்பனை விலையைக் காண்க.
4. காணி உரிமையாளருக்குக் கிடைக்கும் பணம் எவ்வளவு.

03. நேர் விளிம்பு, கவராயம், cm/mm அளவுகோல் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி,

1. **AB=6cm, BAD = 75°, ABC = 120°, BC = 4cm, CD = 8cm,** ஆகுமாறு நாற்பக்கல் **ABCD** ஐ அமைக்க
2. புள்ளிகள் **A,B** ல் இருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கினை அமைக்க.
3. பக்கம் **AB, AD** என்பனவற்றிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுங்கினை அமைக்க.
4. பக்கம் **AB** யை அதன் நடுப்புள்ளியிலும், பக்கம் **AD** யையும் தொட்டுச் செல்லும் வட்டத்தை வரைக.
5. அவ்வட்டத்தின் ஆரையை அளந்தெழுதுக.
6. நாற்பக்கல் **ABCD** யின் பரப்பளவுக்கு சம பரப்பளவுடைய முக்கோணி **ADE** ஐ அமைக்க. இங்கு **E** ஆனது நீட்டப்பட்ட **AB** மீது **E** அமைந்துள்ளது.

*(தொடரும்...)*

பொ. உதயராசா Spl.Trd.Maths
ஆசிரியர் - யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
*போஒம் அளவுமோர் நோய்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# தேர்தல் யூகங்களும் அரசியல் வியூகங்களும்

சிறிலங்காவின் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கும் இரு பெரும் பிரதான கட்சிகளிடையே தேசிய நல்லிணக்க அரசொன்றை அல்லது புரிந்துணர்வு உடன்பாடொன்றை ஏற்படுத்துவதில் ஈடுபட்டவர்களின் முயற்சிகளில் எந்தவிதமான நம்பிக்கையும் ஏற்படாத நிலையில், அத்தகையதொரு முயற்சி பெரும்பாலும் தோல்வியையே எட்டியுள்ள சூழலில், மீண்டுமொரு தேர்தலுக்கான சாத்தியக்கூறுகளே தென்பட ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான அரசியல் போட்டி அல்லது மோதல் நிலையானது எந்தவகையிலேனும் தணிந்து ஒரு தற்காலிக சமரச நிலையேனும் எட்டும் என்ற நம்பிக்கையானது ஒரு சிலரிடம் இருந்தபோதும்கூட, தேசிய நலன்கருதி சமாதான நகர்வுகளை முன்னெடுக்கும் நோக்குடனேனும் இருதரப்பினரும் பரஸ்பர புரிந்துணர்வுடன்கூடிய விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ளக்கூடிய மனநிலையில் அந்த இருவரும் இல்லை என்ற அரசியல் யதார்த்தத்தை இருதரப்புக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் இயங்கியோருக்குத் தெரியாமல்போனது துரதிர்ஷ்டமே.

ரணில் நாட்டில் இல்லாதவேளையில் தனது நிறைவேற்று அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, முக்கிய மூன்று அமைச்சுக்களை தன்வசம் எடுத்துக்கொண்டதனை சந்திரிகா எந்தவகையில் நியாயப்படுத்த முயன்றாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் ரணில் இல்லை.

அவரைப் பொறுத்தவரையில் இதனை ஒரு மிகமோசமான துரோகச்செயலாகவும், தனக்கு எதிராக சந்திரிகா மேற்கொண்ட அரசியல் சதியாகவுமே கருதுகிறார்.

எனவே, இந்தத் துரோகத்தனமான சதியை மன்னித்து அல்லது மறந்து சந்திரிகாவுடன் ஓர் இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதானது - தன்னுடைய அரசியல் ஆளுமைக்கும், எதிர்காலத்திற்கும் அவமானத்தையும், ஆபத்தையும் ஏற்படுத்தும் என ரணில் உள்ளூர நினைப்பதில் நியாயமில்லாமல் இல்லை. சமாதான முயற்சிகள் தேசியநலன் சார்ந்ததாக இருந்தாலும்கூட, அது தொடர்பாக சந்திரிகா - தான் இதுவரை மேற்கொண்ட முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏனைய நகர்வுகள் எதனையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளாத நிலையில், தனது சமாதான செயற்பாடுகளை தடுக்க அல்லது செயலிழக்கவைக்கும் பிரதான இலக்குடனேயே தனது அதிரடி அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதே ரணிலின் நம்பிக்கை.

இந்த நிலையில் சந்திரிகாவுடன் தேசிய அரசு ஒன்றுக்கோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கோ, சமாதான நகர்வுகளைக் காரணங்காட்டி கைகுலுக்கிக்கொள்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை என்றே ரணிலின் நிலைப்பாடு உள்ளது.

அது ஓரளவுக்கு உண்மையுமாகும்.

தேசிய அரசு என்ற பெயரில் ஒன்றை ஏற்படுத்த ரணிலுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் சந்திரிகா விடுத்த அழைப்பு மற்றொரு அரசியல் சதிக்கான மூலோபாயத்தின் அடிப்படையில் அமைந்ததேயாகும்.

தேசிய அரசென ஒரு அரசு அமைந்தாலும்கூட அதன் அதிகாரம்மிக்க தலைமைத்துவம் சந்திரிகாவின் கையிலே முழுமையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தது போன்று தேசிய அரசு என்பதை ஏற்றுக்கொள்வதானது ஐ.தே.கட்சியை அழிப்பதற்கே சமனானதாகும். ஆகவே, சந்திரிகாவின் வியூகத்திற்குள் ரணில் சிக்க விரும்பவில்லை.

அதேசமயம் ரணிலையும், ஐ.தே. முன்னணி அரசையும் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமாதான நடவடிக்கையையுமே எதிர்க்கும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கத் துணிந்துள்ள சந்திரிகாவுடன் தான்போய் ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டில் கையொப்பமிடுவது எத்தகைய ஆபத்தான, அரசியல் தற்கொலைக்குச் சமனான விடயம் என்பதை ரணில் அறியாதவருமல்ல.

எனவே, இருதரப்பினரும் இணைந்து சமாதான நகர்வை முன்னெடுக்கவேண்டுமென்ற சர்வதேச அறிவுறுத்தல், அழுத்தத்தையும் மீறி, ரணில் தனது தனித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்குடனேயே மிகவும் சாதுரியமாக சமாதான நடவடிக்கைகளின் பொறுப்பினை சந்திரிகாவின் தலையில் சுமத்திவிட்டு - தான் வெளியே நிற்க முடிவெடுத்தார்.

நிச்சயமாக இன்றைய சமாதான நகர்வுகள் - அது இன்றுள்ள நிலையிலிருந்து, அதாவது ரணில்விட்ட இடத்திலிருந்து தொடரும் மனோபாவமும், விருப்பும் சந்திரிகாவுக்கு கிடையவே கிடையாது.

அத்தகைய முயற்சி அவரது கூட்டமைப்பில் விரிசலை ஏற்படுத்துவதுடன், அவரதுகாலச் சமாதானப்பொதியை அவரே புறமொதுக்கி வைத்ததாகவும் ஆகிவிடும். அது அவருக்கு கௌரவப் பிரச்சினையுமாகும்.

இந்த நிலையில் - சமாதானத்தை முன்னெடுக்க இருதரப்புமே முன்வராத நிலையில், நாட்டின் அமைதி மட்டுமல்ல, அதன் பாதுகாப்பு நிலையும்கூட - மீண்டும் முன்னிருந்த நிலைக்குப் போய்விடும் என்பதுடன், மீண்டும் போர் மூழும் அபாயமும் ஏற்படும் என்பதை இருதரப்பினரும் உணர்ந்தேயுள்ளனர்.

எனவே, இந்த இக்கட்டான நிலையில் - அதிகாரமற்ற பிரதமரும், அதிகாரம்மிக்க ஜனாதிபதியும் தமக்கிடையேயான அரசியல் பலப்பரீட்சை காரணமாக நாட்டை நெருக்கடி நிலைக்கே இட்டுச்செல்வதும் தவிர்க்கமுடியாதது.

இப்போதைய அரசியல் சூழல் ரணிலுக்கும் - சமாதானத்திற்குமே சாதகமானதாக இருப்பதால், சமாதானத்தின் பேரால் மீண்டும் ஒரு தேர்தலை சந்தித்து வெற்றிகொள்ளவே ரணில் விரும்புவதாகத் தெரிகிறது.

எனவேதான், சந்திரிகாவின் தந்திரவியூகங்களுள் சிக்காது ரணில் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்வதுடன், தேர்தல் வலைக்குள் சந்திரிகாவை வீழ்த்தவே முயல்வதும் தெளிவு...

எனவே, விரைவில் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறும் சாத்தியமிருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

## நாடும் நடப்பும்



செய்தி - *ஜனாதிபதியும் பிரதமரும் ஆளுக்காள் பாதுகாப்பான முறையில் அரசியல் உறவுகளைப் பேணுகின்றனர் - ஆய்வாளர்கள்.*

## பிரபாவின் மாவீரர் தின உரையினை

# ரூபவாஹினி மூலம் ஒளிபரப்பியதற்கு லூசியன் ராஜ கருணாநாயக்க கண்டனம்!

அரசாங்கத் தொலைக்காட்சியான ரூபவாஹினியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்ததாபனமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தின உரையை நேரடியாக ஒளி, ஒலி பரப்பியதற்காகச் சமூகஜனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்கான இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கத்தின் அமைப்பாளர் லூசியன் ராஜ கருணாநாயக்க இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் - கடந்த வருடம் ஊடகத்துறை அமைச்சு - ஐக்கியதேசிய அரசாங்கத்தின் வசம் இருந்தது. அரச ஊடகங்களான ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் - புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையை ஒலி, ஒளி பரப்புச்செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தோம்.

ஆனால், இப்போது ஊடகத்துறை அமைச்சு - ஜனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றபோது, ரூபவாஹினி தொலைக்காட்சியின் செய்மதித்தொடர்புமூலம், ஐரோப்பாவிற்குப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையை நேரடியாக ஒளிபரப்புச்செய்ய வசதிசெய்து கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நேரடி ஒளிபரப்பு வசதிகளுக்காக, ரூபவாஹினி தொழிநுட்பக் குழுவொன்று - கிளிநொச்சிக்கு சென்றிருந்தது. இக்குழு செய்மதிமூலம் இரண்டு பிரிவுகளாக நேரடி ஒளிபரப்பு மேற்கொண்டது.

முதலாவது பிரிவு 3 மணித்தியாலங்களைக் கொண்டதாகவும், இரண்டாவது பிரிவு 1 மணித்தியாலத்தைக் கொண்டதாகவும் இருந்தது. இந்த நேரடி ஒளிபரப்பு வசதி, புலிகள் சார்பில் வெளிநாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கே செய்து கொடுக்கப்பட்டது.

இதன்மூலம் - பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, டென்மாரக், நோர்வே, சுவீடன், ஹொலண்ட், இந்தியா ஆகிய நாடுகளில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உரை ஒளிபரப்பாகியது என்றும், இந்த ஒளிபரப்புக்கு அனுமதி வழங்கப்பட்டது கண்டனத்துக்குரியது என்றும், லூசியஸ் ராஜ கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கடும் நஷ்டம் காரணமாக

# கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் வருட இறுதியுடன் மூடப்படவுள்ளது!

கடும் நஷ்டம் காரணமாக இந்த வருட இறுதிக்குள் கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மூடப்படவுள்ளதாக அதன் தலைவர் அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் 1045 ஊழியர்களுக்கு நாளாந்தம் 10.5 மில்லியன் ரூபா - திறைசேரியினால் வழங்கப்பட்டு வருகின்றது. கூட்டுத்தாபனத்திற்கான மொத்த நஷ்டம் 550 மில்லியன் ரூபாவாகும். இந்த நஷ்டத்தையடுத்து கூட்டுத்தாபனத்தால் பொருட்களை வழங்கும் விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவுகளைக் கொடுக்கமுடியவில்லை. இதனால், விநியோகஸ்தர்கள் பொருட்களை வழங்காத காரணத்தினால், வியாபாரத்தை மேற்கொள்ளமுடியாதநிலையில் கூட்டுத்தாபனம் கடும் நஷ்டத்தைச் சந்தித்துள்ளது.

கடும் நஷ்டம் 1994 ஆம் ஆண்டே கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படத்தொடங்கியது. அதன்பின்னர், மேலதிகமான 586 பேர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கான சம்பளமாக மாதாந்தம் 6 மில்லியன் ரூபாவை திறைசேரி வழங்கி வந்தது எனவும் தெரிவித்தார்.

இதனைவிட 400 தொண்டராக வேலைசெய்யும் ஊழியர்கள் - நஷ்டஈட்டிற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவற்றில் 300 பேரின் பெயரினை நாம் தெரிவுசெய்து, திறைசேரிக்கு வழங்கியுள்ளோம். அவர்கள் தமது நஷ்டஈட்டினைப் பெற்றுக்கொண்டு, வேலையிலிருந்து விலகவுள்ளனர். இவர்களுக்கான நஷ்டஈட்டினை வழங்க எம்மாலான முயற்சிகளை நாம் செய்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறைச்சாலைகளில் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன!

## சிறைச்சாலை ஆணையாளர் கவலை

(கொழும்பு)

அண்மைக்காலமாக சிறைகளில் சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருகின்றதென - சிறைச்சாலைகளின் ஆணையாளர் றூமி மசூர் ஊடகமென்றிற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - அண்மையில் நீர்கொழும்புச் சிறையில் திடீரென மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் - 10 கையடக்கத் தொலைபேசிகளையும், போதைவஸ்து பொருட்களையும், ஆயுதங்களையும், பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பணம், கையடக்கத் தொலைபேசிகள், ஆயுதங்கள், 'கஸ்கிஸ்' எனப்படும் போதைப்பொருள் என்பன கைதிகள் மத்தியில் சாதாரணமாகப் புழக்கத்திலிருந்து வருகின்றது.

இந்தநிலை, எமது சமூகத்தில் மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவற்றைச் சிறைச்சாலை அதிகாரிகளும், ஊழியர்களும், கருத்தில்கொண்டு செயற்படவேண்டும். குற்றத்தைத் தடுக்கும் சிறைச்சாலைகளில் - குற்றச்செயல்கள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

# கிராமிய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்
# 28 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

## வன்னி கிராமிய நிர்வாகத் தலைவர் தெரிவிப்பு

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வன்னியில் 28 கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாக, வன்னி கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் நிர்வாகத் தலைவர் அன்பரசன் தெரிவித்தார்.

தமிழ் நெற் செய்தி நிறுவனத்தினர் அண்மையில் வன்னிப்பகுதியில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் பொருட்டு - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தனர்.

அந்தவேளை, கிராமிய சுய உதவி மேம்பாட்டுத்திட்டம் குறித்து அன்பரசனிடம் அவர்கள் கேட்டவேளையிலேயே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது -

ஒழுங்கமைக்கப்பட்ட கிராமிய சுய உதவி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வன்னியில் பல கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுடன் மேலும் 28 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

கிராமிய மக்களின் சமூக, பொருளாதார, புனர்வாழ்வுப் பணிகளுக்காகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களினதும், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் உதவிகள் பெறப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்வதற்கென ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 7 பேர்கொண்ட, நன்கு செயற்படக்கூடிய செயற்பாட்டாளர் குழுக்கள் அந்தந்தக் கிராம மக்களின் விருப்பத்தின் பேரில் கிராம மக்களில் இருந்தே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுடன் ஒவ்வொரு கிராமத்துக்கும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த நான்கு பேரும் இணைந்து செயற்படவுள்ளார்கள். இவர்களே அந்தந்தக் கிராமங்களுக்கு வேண்டிய கல்வி, சுகாதாரம், பொருளாதார அபிவிருத்தி, விளையாட்டு முதலான துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவர்.

இந்த நடவடிக்கைமூலம் கிராம மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும். அதேவேளை, அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்பாடடையும் என்றார்.

# விக்கிரகத் திருட்டுக்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

கோயில் விக்கிரகங்கள் களவாடப்படுவது அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன. கடநத ஒரு வாரத்தில் மட்டும் உடுவில், வட்டுக்கோட்டை, கொக்குவில் முதலான பகுதிகளில் பல கோயில் விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன.

கொக்குவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இரு கோயிலடி வீதியிலுள்ள காளி கோயில் விக்கிரகங்கள் கடந்தவாரம் திருடப்பட்டுள்ளன. அதேபோல், உடுவில் தெற்கு புளியடி ஞானவைரவர் கோயிலின் பிள்ளையார், விஷ்ணு முதலான தெய்வவிக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகை ஆலயத்தின் - முருகன், பழனிஆண்டவர், வள்ளி, தெய்வயானை உருவங்கள் என்பனவும் களவாடப்பட்டுள்ளன.

இத்தகைய திருட்டுக்கள் குறித்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. பொது மக்களும் தற்போது விழிப்பு நடவடிக்கைகளில ஈடுபடத்தொடங்கியுள்ளார்கள் எனத் தெரியவருகிறது. (111)

# ஐந்து உள்நாட்டு நகரங்களுக்கு கொழும்பிலிருந்து விமானசேவை!

## புதுவருடத்திலிருந்து ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டு விமானப் போக்குவரத்து சேவை - புது வருடத்திலிருந்து சிறிலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனத்தால், கொழும்பிலிருந்து 5 முக்கிய நகரங்களுக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனவரி மாதத்திலிருந்து சிறிலங்கன் எயர் ரக்ஸி சேவை என்ற பெயரில் கண்டி, கந்தலம, பெந்தோட்ட, காலி , நுவ்ரெலியா ஆகிய சுற்றுலா நகரங்களுக்கு இந்த உள்நாட்டு விமானசேவை நடத்தப்படவுள்ளது.

இது குறித்துத் தகவல் வெளியிட்ட இலங்கைச் சுற்றுலா சபைப் பெண் பேச்சாளர் - நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகளின் பயனாக, இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தததன் நேரடி விளைவாகவே, இந்த விமானசேவை ஆரம்பிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இப்போது பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் - இலங்கையின் பல பகுதிகளையும் சுற்றிப்பார்க்க ஆசைப்படுகின்றனர். ஆனால், பஸ்மூலமோ, ரயில்மூலமோ இந்தப் பயணத்தை மேற்கொள்ளுவதற்கு நீண்டநேரம் செல்கிறது.

இந்த விமானசேவை ஆரம்பிக்கப்பட்டால், போக்குவரத்து நேரம் வெகுவாகக் குறைக்கப்படும்.

இது சுற்றுலாப் பயணிகளுக்கு இலகுவானதாக இருப்பதுடன், அவர்கள் அதிக இடங்களைப் பார்வையிடவும் வசதியாக அமையும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருக்கார்த்திகை உற்சவத்திற்கு பக்தர்கள் செல்வதற்கு ஏற்பாடு

பருத்தித்துறை இந்து இளைஞர்சங்கம் - அருள்மிகு கதிர்காம ஸ்தலத்தில் டிசம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள திருக்கார்த்திகை உற்சவத்திற்குச் செல்லவுள்ளனர்.

இந்த யாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் - கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

இதற்காக வதிரி பரமானந்தா ஆசிரமத்துக்கு இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விரும்பும் அடியார்கள் ச. பத்மநாதன் கண்ணன் போட்டோ பிரதிநிலையம், 165 பிரதான வீதி, பருத்தித்துறை என்ற விலாசத்துடன் தெடர்பு கொள்ளுமாறு - இந்து இளைஞர் சார்பில் கேட்கப்பட்டுள்ளனர். (35)

# புலிகள் எம் கருத்தை மதிக்காவிடின் புதிய திட்டங்கள் கொண்டுவரப்படும்

## கண்காணிப்புக்குழு உபதலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் எமது கருத்துக்களுக்கு இணங்கி வரமறுத்தால், யுத்தநிறுத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டிவரும் என, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் சிறில் ஹேரத்தைச் சந்தித்து உரையாடியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது - கண்காணிப்புக்குழுவினர் தமது பணிகளைச் சரியாகச் செய்வதற்குப் பல தடவைகள் ஏற்பட்டதுண்டு. மிகமுக்கியமாகப் பொது இடங்களில் புலிக்கொடி ஏற்றுவது தடுக்கப்பட வேண்டுமெனக் கோரியபோதும், அதனை புலிகள் நிராகரித்துவிட்டனர்.

எம்மால் அவற்றைப் பலவந்தமாக அகற்றமுடியவில்லை. இது தொடர்பாகப் புதிய தீர்மானங்களை எடுக்கவேண்டியநிலையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உள்ளது. அப்போதுதான் பிரச்சினைகள் எழுவதைத் தடுக்க முடியும் என்றார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் தமது கடமைகள் குறித்து விளக்கிக்கூறியுள்ளார்.

தம்முடைய உதவிகள் தேவைப்படும்போது, தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் சிறில் ஹேரத் தெரிவித்தார். நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கை சம்பந்தமான பிரச்சினைகள் எழும்போது, அதற்குப் பொறுப்பானவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதையும், கொழும்பு - வன்னிப் பகுதிகளுடன் தொடர்புகொள்வது குறித்தும், புதிய பாதுகாப்பு செயலாளர் விளக்கியுள்ளார்.

## வடக்கு - கிழக்கில்

# முதியோர் நலன்களைப் பேண தொண்டர்களுக்குப் பயிற்சி

வடக்கு கிழக்கில் முதியோர் நலன் பேணல் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, முதியோர் நலனைப் பேணுவதற்கான தொண்டர்களுக்கான பயிற்சித் திட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

யுத்தப் பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள இளம் தொண்டர்கள், இந்தப் பயிற்சியைப் பெறுவார்கள்.

சமூகசேவைகள் அமைச்சு, சுகாதார, போஷாக்கு நலத்துறை அமைச்சு ஆகியன இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 தொண்டர்கள், இந்த மூன்று மாதப்பயிற்சி நெறியைப் பெறுவார்கள். முதியோர் தேசிய கவுன்சில் ஊடாக - லீகல் எய்ட் பவுண்டேஷன் - இதற்கான நிதியை வழங்கவுள்ளது.

பயிற்சியை முடித்துக்கொண்டதும் இவர்கள் மேற்கூறிய மாவட்டங்களிலுள்ள சுகாதாரப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

### மருந்து வகைகள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - கொடிகாமம் வைத்தியசாலைக்கு இந்த வருடத்திற்குரிய இறுதிக் காலாண்டு மருந்து வகைகள் யாவும் வந்து சேர்ந்துள்ளதாக - சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வைத்தியசாலைக்குத் தற்போது மின்சாரமும் வழங்கப்பட்டிருப்பதால், ஏற்பு தடுப்பு மருந்தும் களஞ்சியப்படுத்தக்கூடியதாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.




புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நியைத்தினரால் சமாதான நீதிவான் பட்டம் பெற்றவர்களைக் கௌரவித்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வலி.தெற்கு சனசமூகநிலைய சமாசத்தலைவர் இ.அரிகரன் உரையாற்றுவதனை இங்கு காணலாம். (83)

## வல்லிபுரம் பகுதியில்

# படையினரால் தாக்கப்பட்ட இருவரும் இராணுவ அதிகாரிகளால் விசாரணை

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் வேட்டைக்குச் சென்றவேளை, படையினரால் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தவர்களில் இருவரும், படை அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மகேந்திரம் மதனராசன் (வயது-24), இராமசாமி சத்தியமூர்த்தி (வயது-23) ஆகிய இருவருமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வல்லிபுரம் பகுதியில்வேட்டைக்குச் சென்றிருந்த ஏழுபேர் - படையினரால் கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்டனர். இவர்களுடன் சென்ற ஏனையோர் தப்பிச்சென்றிருந்தனர்.

படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் கடுமையான காயங்களுக்குள்ளாகி, இருவரும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் வைத்தியசாலைக்குச் சென்ற, வரணியில் நிலைகொண்டுள்ள 52 ஆவது படைப்பிரிவின் உயர் அதிகாரிகள், இச்சம்பவம் தொடர்பாக இருவரையும் விசாரணைக்குட்படுத்தினர்.

இதேவேளை, கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள்,மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஆகியோரும் - இருவருடைய வாக்குமூலத்தையும் பதிவு செய்தனர். (202)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி 32 இலட்சம் ரூபா அறவீடு

(சுதுமலை)

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பிரதேசத்துக்குள் சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை இடம்பெற்றபோதும், கடந்த 11 மாதங்களிலும் சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பவர்களைக் கைது செய்து தண்டப்பணமாக 32 லட்சம் ரூபாவினை பொலிஸார் அறவிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் அதிகளவு தண்டப்பணம் - மானிப்பாய் பொலிஸ்நிலையத்தினாலேயே அறவிடப்பட்டதாக மானிப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (91)

# அமெரிக்க படை தாக்குதல் 54 ஈராக்கியர்கள் மரணம்!





ஈராக்கின் சமனா நகரின் மத்திய பகுதியில் 54 ஈராக்கியர்கள் அமெரிக்கப்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.


அமெரிக்க வாகனத் தொடரணி ஒன்றின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்த இருந்தவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு அமெரிக்கப் படையணிகள் சமனா நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தவேளை அந்தத் தொடரணிமீது மோட்டார் மற்றும் கிரனைட் தாக்குதல்களை இவர்கள் மேற்கொண்டதாக அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் - முன்னாள் அதிபர் சதாமின் படையான 'படஜீன்' அமைப்பின் சீருடையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் தங்கியிருந்தாகக் கூறப்படும் 3 கட்டடங்களையும் அமெரிக்கப் படையினர் தகர்த்துள்ளனர்.

## இஸ்ரேலியப் படையினரால் 30 பலஸ்தீனியர்கள் கைது!



(ரமலா)


பலஸ்தீனத்தின் மேற்குப் பிரதேச நகரான ரமலாவை, நேற்று அதிகாலை முற்றுகையிட்ட இஸ்ரேல் படையினர் 30 பலஸ்தீனர்களை கைது செய்துள்ளனர்.

அறுபது டாங்கிகள், கவச வாகனங்கள் உதவியுடன் இந்த முற்றுகையை இஸ்ரேல் படையினர் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன ஹமாஸ் போராளிகள் மீதே இந்த முற்றுகையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகள் நடைபெற்ற சண்டையில் 60 இஸ்ரேலிய பிரஜைகளின் மரணத்திற்கு இந்தப் போராளிகளே காரணமாக இருந்தார்கள் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில் இஸ்ரேலியப் படையினரின் மேற்படி நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை - பலஸ்தீனமருகே பாதுகாப்புச்சுவர் அமைப்பதை நிறுத்துவதற்கு இஸ்ரேலியப் பிரதமர் மறுத்துள்ளார். பலஸ்தீனத் தற்கொலைப் போராளிகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவதைத் தடைசெய்வதற்கு அந்தத் தடுப்புச்சுவர் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.



பலஸ்தீனத்தின் ரமலாப் பகுதிக்குள் நுழைந்த இஸ்ரேலியப் படையினரால் தகர்க்கப்பட்ட பலஸ்தீனருக்குச் சொந்தமான வீடொன்று எரிந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



தாய்லாந்தில் குரங்குகளை வணங்குவதால் குடும்பத்திற்குப் பல நன்மைகள் ஏற்படுமென்ற நம்பிக்கையுண்டு. அந்நாட்டில் கொண்டாடப்படும் குரங்குகளுக்கான விழா ஒன்றில் பெப்சி குளிர்பானத்தை அருந்தும் குரங்கொன்றைப் படத்தில் காணலாம்.

## துருக்கி குண்டுவெடிப்பு சந்தேக நபர்கள்கைது!



(இஸ்தான்புல்)

துருக்கியின் தலைநகர் - இஸ்தான்புல்லில் யூதர்களின் வழிபாட்டுத்தலங்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 60 இற்கும மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு காரணமானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 22 பேர் சிரியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட பலர் சிரியாவுக்குள் தப்பியோடிவிட்டதாகவும், இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் 22 பேரை சிரிய அதிகாரிகள் கைது செய்து துருக்கி எல்லையான கராயில் வைத்து துருக்கியிடம் ஒப்படைத்துள்ளனர்.

## கியூபா தீவிலுள்ள கைதிகளை விடுவிக்க அமெரிக்கா இணக்கம்



(குவான்ரனமோ)

கியூபாவின் தீவான குவான்ரனமோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 100 க்கு மேற்பட்ட கைதிகளை அடுத்த வாரம் விடுதலை செய்வதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுமா என இதுவரை அறிவிக்கப்படவில்லை.

நாற்பது நாடுகளைச் சேர்ந்த 660 க்கு மேற்பட்ட தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆப்கான் தீவிரவாதிகளைத் தடுத்து வைப்பதற்கென 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த தடுப்பு முகாம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தடுப்பு முகாமில் இருந்து இதுவரை 88 பேர்வரை விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இவர்கள் தமது சொந்த நாடுகளில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை - தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் - தொடர்ந்து தம்மை தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

## உலக நோக்கு

### ஸ்பெயின், கொரிய நாட்டுப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறமாட்டாது

### அந்நாடுகள் அறிவிப்பு



அண்மையில் ஈராக்கில் நடைபெற்ற இரு தாக்குதல்களில் கொரியாவைச் சேர்ந்த இரு பொறியியலாளர்களும், ஸ்பெயினைச் சேர்ந்த 7 புலனாய்வுப் பிரிவினரும் கொல்லப்பட்ட பின்னரும், இரு நாடுகளும் தொடர்ந்தும் ஈராக்கில் தமது பணிகளைத் தொடரப்போவதாகத் அறிவித்துள்ளன.

இதனிடையே ஸ்பெயினின் எதிர்க்கட்சிகள் ஈராக்கிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ளவேண்டுமென தெரிவித்துள்ளன.

ஆனால் ஸ்பெயின் பிரதமர் தமது பணிகளை ஈராக்கில் முடித்துக் கொள்ளும்வரை இராணுவத்தை அங்கிருந்து விலத்தப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

### சீன நிலநடுக்கத்தில் 10 பேர் பலி

சீனாவின் மலைப்பிரதேசத்திலுள்ள சஒசூ என்ற பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 பேர்வரை கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் அந்த மலைப்பிரதேசத்தில் வசிக்கும் மந்தை மேய்ப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊர்சுற்றி கிறுக்குவது

"அதிகமாக ஆசைப்படுகிற ஆணும், அதிகமாகக் கோபப்படுகிற பெண்ணும் நிம்மதியாக வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை" என்று நண்பர் தொடங்கினார்.

"இந்த வசனத்தைப் எங்கேயோ கேட்டமாதிரி இருக்கே" என்று இடைமறித்தார் எதிர்வீட்டுக்காரர்.

இது படையப்பா படத்தின் நடிகர் ரஜினி பேசும் வசனம். நான் என்ன சொல்லவருகிறேன் என்பதைக் கவனியாமல், இது என்ன வசனம், யார் பேசிய வசனம் என்ற ஆராய்ச்சியில் இறங்கினால் என்னத்தைச் சொல்லுறது என்றார் நண்பர்.

சரி சொல்லவந்ததைச் சொல்லும் என்று தூண்டினேன் நான்.

கடந்த தேர்தலில் தனது பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியடைந்து, ஆட்சி பீடத்துக்கு வரமுடியாமல்போனது சந்திரிகாவுக்கு ஏமாற்றம்.

ஆட்சி பீடத்திற்கு வந்த ரணில் தனது சொல்லுக்கு மதிப்புக்கொடுக்காமல், தனது முதுகில்குத்திய எஸ்.பி போன்றவர்களுக்கு, தனது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் சமுர்த்தி போன்ற அமைச்சுக்களைக் கொடுத்தது ஆத்திரம். இவர்களுக்கு ஜனாதிபதி என்ற முறையில் பதவிப்பிரமாணம் செய்துவைத்தபோதே தமது முகத்தில் அதை வெளிப்படையாகக் காட்டியும், ரணிலும், அவரது அமைச்சர்களும் ஜனாதிபதிக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுப்பதில்லையென்ற குமுறல்.

தனக்குரிய அதிகாரங்களைப் பயனபடுத்துவேன் என்று எச்சரித்தும், ரணில் அதைப் பொருட்படுத்தாதிருந்தது. இந்தியாவின் உதவியைத் தான் நாடிக கொண்டிருக்கையில் - அந்தரங்கமாக இந்தியாவுடன் ரணில் உறவுகொண்டிருந்ததால் ஏற்பட்ட ஆத்திரம்.

விடுதலைப் புலிகள் கொழும்புக்கு ஹெலிகளில் வருகின்றார்கள், போகிறார்கள். வெளிநாடுகளுக்குப் போய்வருகிறார்கள். தன்னிடம் யாரும் இதுபற்றி ஒருவார்த்தைகூடப் பேசுகிறார்கள் இல்லை.

தனது மாளிகைக்கு சமீபத்திலுள்ள ஹோட்டலில் விடுதலைப்புலிப் பிரமுகர் புலித்தேவன் வந்து தங்கிச்சென்றதால்- தாம் தமது அச்சத்தைத் தெரிவித்த பின்பும், அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. அவர்கள் வந்துபோனது மட்டுமல்ல அவர்கள் எங்கேயெல்லாமோ போய் பேசித் தயாரித்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபை ரணிலிடமும் கொடுத்துவிட்டார்கள். இதையெல்லாம் நான் சும்மா பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமாக்கும்.

அவையெல்லாம்தான் சந்திரிகாவுககுப் பொறுக்கமுடியாத கோபத்தை ஏற்படுத்தியது. இதனால்தான், மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்று அதிரடி நடவடிக்கையிலிறங்கினார் என்று சொல்லுறீராக்கும் என்றார் எதிர் வீட்டுக்காரர்.

அது மட்டுமில்லையப்பா! அதிகம் கோபம் வந்து அவ அதிரடியாக நடவடிக்கை எடுத்துவிட்டார். இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியாமல் படாத பாடுபடுகிறார். நிம்மதியுமில்லை.

"ஓம் ஓம் உண்மைதான். எண்டாலும், இந்தப் பெண்டுகள் சிலருக்கு இருக்கிற அழுக்குக்குணம் விட்டுப்போகாது. தான் எடுத்த நடவடிக்கை சரியெண்டு நிருபிக்கிறதுக்கும் இந்தப் புலிகள் ஒண்டுக்கும் ஆத்திரப் படுகிறாங்களில்லை. எல்லாத்துக்கும் பொறுமையாய் இருக்கிறாங்கள். இதுதான் இப்ப அம்மாவின்ரை கவலையாய் இருக்கிறமாதிரித்தெரியுது.

அம்மா எதுக்கும். கவலைப்படக் கூடிய ஆளல்ல. ஆனால், அதிகம் கோபப்பட்டு நிம்மதியை இழந்திருக்கிறார் என்பது மட்டும் நிச்சயம்.

முதலில் தேசிய அரசு என்றா, பிறகு நல்லிணக்க அரசு என்று சொன்னா, அடுத்து பிரதமருக்கும் தமககும் இடையில் ஒரு உடன்பாட்டைச் செய்து சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடரலாம். தம் இருவருக்குமிடையில் ஒரு இணக்கசபையை அமைக்கலாம் என்றெல்லாம் ஒவ்வொரு யோசனையாகச் சொல்லிப்பார்த்து முயற்சிசெய்யிறா?

ஆனால், ரணில் எதுக்கும் ஒத்து வாறமாதிரித் தெரியவில்லையே.

நாட்டின் நலனுக்காக - எந்தவித பதவி ஆசையோ, அதிகார மோகமோ இல்லாமல், நல்லிணக்க அரசு அமைத்து அமைதியைக்காத்து, நாடுபிளவுபடாமல் தடுத்து முன்னேற்றுவோம் என்று எவ்வளவோ எடுத்துச்சொல்லியும்- ரணில் புலிகளின் விருப்பத்தை நிறைவேற்றத்தான் விரும்புகிறார் என்று சந்திரிகா நாட்டு மக்களிடம் முறையிடுவார்.

இப்பொழுது ஊடகத்துறையும், இனவாதக் கட்சிகளும், இனவாதப் பத்திரிகைகளும் அம்மாவின் பக்கம்தானே நிற்கின்றன.

அப்போ நாட்டின் நிலைமை, அது கிடக்கட்டும். தேர்தலுக்குப்பின் பார்த்துக்கொள்ளலாம் நண்பர் போய்விட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

"சமாதானம் வரலாம், சண்டையும் வரலாம், சமாதானத்திற்கான சண்டையும் வரலாம்... சண்டைக்கான சமாதானமும் வரலாம் - சண்டைக்கான தேர்தலோ, சமாதானத் திற்கான தேர்தலோகூட வரலாம்..."

"என்னப்பா வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரிபோல அரசியல் நிலைபற்றி உளறுகிறாய்..."

"நான் ஏன் உளறுகிறேன் நாட்டின் அரசியல் சூழலைக் கூறுகிறேன்... நீ இண்டைக்கு பேப்பர் பாக்கேல்லையோ...?"

"பார்த்தன் தேர்தல் வந்தாலும் வரலாம்... என்ற தொனியிலயெல்லே செய்தி கிடக்கு..."

"அதைத்தான் சொன்னன்... ரணில் தேர்தலுக்கு தயார் என்கிறார். சந்திரிகாவின் கூட்டணியே இன்னும் சரியா அமையேல்லை... முந்தி ஆட்சியைக் கலை என்று கத்திக்கொண்டே சந்திரிகாவைச் கலைச்சு திரிந்த ஜே.வி.பி இப்ப தேசிய அரசுக்கு ஆதரவு தருவோம் என்கிறது... தேர்தல் வேண்டாம் போரைத் தொடங்கு என்கிறது பௌத்த சங்கம்... இந்த நிலையிலை அரசியல் நிலையானது, வானிலை அறிக்கை போன்று உறுதி செய்யமுடியாத விடயமாத்தான் இருக்குது..."

'சரி... தேர்தல் வந்தால் என்ன நடக்கும்... ஆர் வருவினம்'

'ஆர் வந்தாலும் என்னத்தை நடக்கப்போகுதாம்? பழையபடி வேதாளம் முருங்கை மரத்திலை ஏறின கதைதான் தொடரும்....'

'அப்ப சமாதானத்துக்கு என்ன நடக்கும்...?'

'இப்ப அவயளுக்கை நடக்கிற சண்டைக்கு சமாதானம் பிடிக்க ஆக்களைக் காணேல்லை... இதுக்குள்ள எங்கடை பிரச்சினையை ஆர் பாக்கப் போகினம்...'

'அப்ப சண்டை வருமோ?'

'அதுதான் முதல்லை சொன்னேனே வானிலை அறிக்கை மாதிரி ஒரு அரசியல் நிலை அறிக்கை... அது மாதிரித்தான்...'

'சண்டை வரலாம், சமாதானமும் வரலாம், சமாதானத்துடன் சண்டையும், சண்டையுடன் சமாதானமும்... சமாதானத்திற்கான சண்டையும், சண்டைக்கான சமாதானமும்....'

"ஐயையோ நிறுத்து... தலையை சுத்துது... தலையைப் பிய்க்கவேணும் போல இருக்கு..."

-தெருவாசி

## பிள்ளைகளைச் சுட்டுவிட்டு
# தற்கொலை செய்த பொலிஸ் அதிகாரி!

(அம்பாறை)

அமபாறை தமண 8 ஆம் கட்டையில், பொலிஸ்காவல் நிலையப் பொறுப்பதிகாரி, தனது இரண்டு பிள்ளைகளையும் சுட்டுக்கொன்று விட்டு தன்னைத்தானே சுட்டு, தற்கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியான இந்த சப்இன்ஸ்பெக்டர் விடுமுறையில் சென்று தனது பிள்ளைகளையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து சுட்டுக்கொன்றுவிட்டு, தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## சங்கரியை நியமித்த...

சங்கரி தலைவராக தெரிவுசெய்யபபட்டார். அந்த மத்தியசபைக் குழு நேற்று தங்களுக்கு அவர்மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானித்துள்ளது. அதன் பிரதிபலிப்புக்களை அவர் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தலைவர் மீது நம்பிக்கையில்லை என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குலநாயகம் மற்றும் மத்திய குழுவினைச் சேர்ந்த இன்னொரு மூத்த உறுப்பினரான செல்லத்தம்பியும் அந்தப் பிரேரணையை ஆமோதித்தனர்.

அந்தப் பிரேரணைக்கு சார்பாக 25 மத்திய குழு உறுப்பினர்கள் எழும்பினர்கள். தங்களுடைய ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்த கூட்டம் நிகழ்ந்தபின்பு நடந்த சம்பவங்களை யாராவது தொலைக்காட்சியில் பார்த்திருந்தால், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரச்சினையில் யார் ஈடுபட்டார்கள் என்று எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கும்.

மத்திய குழு தீர்மானம் எடுத்த பின்பு அவரை நாம் எமது தலைவராக இனிமேல் கணிக்கமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலை பதற்றநிலை...

பள்ளிவாசல்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்படி - விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன், கும்புறுப்பிட்டி அரசியல்துறைப் பொறுப்பாளர் க.சிவகுமார் ஆகியோரும் பொலிஸ் தரப்பில் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் உபாலி ஹேவகே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுதேசநாதன் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தயானந்த திசாநாயக்க, துறைமுக பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க குணவர்த்தன ஆகியோரும், படைத்தரப்பில் - லெப்.கேணல் ஜெயசேகரவும் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன். - நாங்கள் சமாதானத்தை விரும்புவதற்கான திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம். எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையுடையவர்களாக இருக்கிறோம். எமது வேலைத் திட்டங்கள் சமாதான வேலைத் திட்டங்களை முன்னோக்கியதாகவே உள்ளது.

ஆனால், எமது சமாதான முன்னெடுப்புக்களை விரும்பாத ஒரு சக்தி திருமலை நகரில் கடந்த 25 ஆம் திகதி முஸ்லிம் இளைஞர்களும், தமிழ் இளைஞர்களும் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர்கள்மீது ஓட்டோ ஒன்றில் வந்து கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தார்கள். எனவே, இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கண்டுபிடிக்கவேண்டும். இந்தப் பிரச்சினையை உருவாக்கிய மூன்றாவது குழுவை நாம் இனங்காண வேண்டும். இதனைவிடுத்து வெறுமனே சமாதானக் கூட்டங்கள் என்ற போர்வையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லையென தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இரு பகுதியினரும் மூன்றாம் தரப்பைக் கண்டுபிடிப்பது என்று இணங்கி கூட்டத்தை முடித்துக்கொண்டனர்.

இதேவேளை - நேற்றுமாலை முஸ்லிம் பிரமுகர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நடக்கவிருந்த சந்திப்பொன்று வேறொரு தினத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அத்துடன் - நேற்றுமாலை 7 மணி தொடக்கம் இன்றுகாலை 6 மணிவரை திருமலை பொலிஸ் பகுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (04,10)

## வடகிழக்கில் காணாமற்போனோர் தொடர்பான
# ஆணைக்குழு சமர்ப்பித்த சிபாரிசை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்!
## நாடாளுமன்றில் சம்பந்தன் எம்.பி வேண்டுகோள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோர் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசுகளை உடன் அமுல்செய்யவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்றக் குழுக்கூட்ட விவாதத்தின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் காணாமல் போயுள்ளனர். இதனால் பெருமளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஆணைக் குழு காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குதல், காணாமல் போனோர்கள் வசித்த பதவிக்கு பதிலாக அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவது உட்பட பல சிபாரிசுகளை செய்திருக்கிறது. இதனை அமுல்படுத்துவதில் அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்றும், அதற்காக விசேட அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்படவேண்டும் என்றும் சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நாட்டுப்பற்றாளர் இருவர் சாவடைந்துள்ளனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 16 ஆம் திகதி நீரில் மூழ்கி நாட்டுப்பற்றாளர் இருவர் சாவடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு, விபுலானந்தபுரம், செங்கலடியைச் சேர்ந்த தவராசா குலேந்திரன், மட்டக்களப்பு, உறுகாமம், கரடியானாறைச் சேர்ந்த அமரசிங்கம் அமல்ராஜ் ஆகிய இரு நாட்டுப்பற்றாளர்களுமே சாவடைந்தவர்கள் ஆவர்.

## மக்கள்...

விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பாக இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான திகதி நிர்ணயம் செய்வதற்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஜனாதிபதி...

இந்தக் குழு விடயங்களில் தீர்வு காண்பதற்கு மீண்டும் சந்திக்கவுள்ளது.

உடன்பாட்டுக்கான அம்சங்கள் குறித்து திட்டவட்டமாக முடிவு செய்வதற்கு ஜனாதிபதியும், பிரதம மந்திரியும் இவ்வார இறுதியில் சந்திப்பார்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

## முஸ்லிம்...

பெற்றுவருகிறார்.

இதேவேளை - நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சீனன்குடா கண்டலடி என்னும் இடத்தில் முஸ்லிம் வீடொன்றின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதோடு, மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நடந்த பிரதேசம் முஸ்லிம்கள் வாழும் பிரதேசமாகும். (04,10)

## அதிகாரங்களைப் பெறுவதற்காக முதலமைச்சர்கள் அமைப்பு ஸ்தாபிதம்

(கொழும்பு)

ஏழு மாகாண சபைகளின் முதலமச்சர்கள் கடந்த சனிக்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் அனைத்து முதலமைச்சர்களும் அங்கம் வகிக்கும் அமைப்பு ஒன்றை ஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ், மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் இருந்து போராடிப் பெறும் நோக்கத்துடனே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பொலநறுவையில் நடந்த இந்தக் கூட்டத்தில் மாகாண சபைகளின் நிர்வாகத்தின் மத்திய அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. வடக்கு- கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களின் முதலமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸநாக்க, ஜக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள வழிவகுத்தது.

ஆனால், தற்போது அரசாங்கம் சில அதிகாரங்களை மீளப்பெற எத்தனிப்பதாகத் தெரிவித்தார்.

## புலித்தேவன் தலைமையில்...

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் செயலாளர், பிரதிச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரையும் சந்தித்திருந்தனர். ஆபிரிக்க தேசிய காங்கிரசின் பலகட்சித் தீர்வுக்குழுவைச் சந்திப்பதற்கு முன்னர் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் புலிகளின் அரசியல் குழுவினர் - தென்னாபிரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு குழு, சுதந்திர தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசியலமைப்பு நீதிமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

மேலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் குவாஸுலு நட்டால் மற்றும் மேற்கு கேப் ஆகிய மாகாணங்களின் தலைவர்களுடனும் பேச்சு நடத்திய புலிகளின் அரசியல்குழு போராளிகள், கூட்டணிப் பேச்சுக்கள் குறித்த அவர்களின் அனுபவங்கள் குறித்து விவாதித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு-நெருக்கடியான சூழல் நிலவும் அந்த நாட்டில் சமாதானரீதியான இறுதித் தீர்வை எட்டுவதற்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உதவும் என்று உறுதியளிக்கப்பட்டது.

பல கட்சிகள் இயங்கும் இலங்கையில் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான அமைதித்தீர்வை எட்டுவதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவங்கள் உதவும் என்று நம்புவதாகவும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## இந்த'ய அரசு...

பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்த எங்களின கருத்து - இரண்டு கட்சிகளுக்கிடையில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து இருவரும் கூட்டிணைந்து சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதுதான் நல்ல அணுகுமுறையாகும்.

பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும்போது முஸ்லிம்களுக்கு தரப்பட்டுள்ள உத்தரவாதம் குறிப்பாக தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும்.

இதற்குப் புறம்பாக வட - கிழக்கில் ஆங்காங்கே நடக்கின்ற கலவரங்களும், உயிர்ச்சேதங்களும் முஸ்லிம்களை நிறையப் பாதித்திருப்பதை எடுத்துரைத்தோம். விரைவில் இதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டோம்.

நேரடியாக இந்தியா தலையிட வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை விடுக்கவில்லை. இராஜதந்திர ரீதியாக இந்தியாதான் செய்யவேண்டும.

ஏற்கனவே இலங்கை - இந்திய பிரதமர்கள் விடுத்த அறிக்கையில் இடைக்கால நிர்வாகம் இறுதித்தீர்வின் ஒரு அங்கமாக அமையவேண்டும். அதேநேரம் இலங்கையின் இறைமைக்கு பாதிப்பான அம்சங்கள் விடுதலைப் புலிகளின் யோசனைகளில் அடக்கப்பட்டிருப்பது குறித்து விமர்சித்த ஹக்கீம்,

தேர்தல் ஒன்றின்மூலம் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்ந்துவிடமாட்டாது.

வடக்கு - கிழக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் முஸ்லிம்களுக்கு கிழக்கில் ஏற்பட்டுவரும் பாதிப்பினால் காலப்போக்கில் வன்முறை கலாசாரமாக உருவாகி வருவதையும் அவரிடம் எடுத்துரைத்தேன். அதற்காக முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டுமென்பதை நியாயப்படுத்தியதாக கூறியிருப்பது திரிபுபடுத்தப்பட்ட ஒன்றாகும் எனவும் தெரிவித்தார்.


## பத்திரிகை விற்பனையாளர் தேவை

யாழ்.மாநகரப் பகுதியின் வர்த்தக மையப் பகுதியில் பத்திரிகையை எடுத்துச்சென்று விற்பனை செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆண்கள் தேவை.

**வயது எல்லை: 40 - 50 வருடங்கள்**

விரும்புவோர் 03.12.2003 அன்று அலுவலக நேரத்தில் சமுகம் தரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்,
நமது ஈழநாடு.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.